
குங்குமச்
சிமிழ்
15-9-2010
விலை ரூ.4
என்றும்
இரவுப்
பூக்கள்
புஷ்பா தங்கதுரை

முழு நாவல்

# என்றும் இரவுப் பூக்கள்

இண்டர்நேஷனல் டிடெக்டிவ் ஏஜென்ஸியின் அந்த முக்கிய அறையில் லாரா சுருக்கமாகச் கலவரமானாள் "வினோத் வினோத் வினோத் வினோத்..." என்று ஸ்தாயிகளைக் கூட்டி அவனை நோக்கிப் பரபரத்தாள்.

வினோத் மந்தமாக உட்கார்ந்திருந்தவன், லாராவின் திடீர் பரபரப்பைக் கண்டு நிமிர்தான். உண்மையில் ஏதோ எமர்ஜென்ஸி இல்லாவிடில் லாரா மேல் ஷர்ட் பட்டன் விலகித் தன் முழுமைகளை காட்டியிருக்க மாட்டாள். வெறும் பார்வையைக் கூட அவள் அனுமதிப்பதில்லை.

வினோத் போனைக் கையில் வாங்கினான். ஹல்லோ என்று அவனது வார்த்தையை முறியடித்துக் கொண்டு ஒரு பெண் சிதறினாள்.

"மிஸ்டர் மிஸ்டர்... யார் இருந்தாலும் வாங்க! ஆபத்திலே இருக்கேன். என்னைக் கொலை பண்ண ஒருத்தன் வந்திருக்கான்"

வினோத்தின் மூளை சுர்ரென்று வேலை செய்ய வலதுகையால் பேப்பர் நோட்டை இழுத்து, பால் பாயிண்டையும் பொறுக்கி. "உங்க பேர், விலாசம் சீக்கிரம்" என்றான்.

"என் பேர் சஞ்சலா ! மார்ஷல் அபார்ட்மெண்டிலே 54லே இருக்கேன். தனியா இருக்கேன். என்னைக் கொல்ல ஒருத்தன் வரான் ('ரைட் மேடம்... போலீஸைக் கூப்பிட்டீங்களா ?) ஐயோ நம்பர் ஒன்று ஸீரோ ஸீரோ கிடைக்க மாட்டேங்குதுங்க... அலுத்துட்டேங்க. நேரமில்லீங்க... உங்க நம்பர் கிடைச்சுதுங்க. நீங்களாவது வாங்க... வாங்க..." டிர்ர்ர்ர் ரிங்க்.. (ஹலோ...ஹலோ)

ஏதோ மணி அடிக்கும் சப்தம். தொடர்ந்து ரிஸீவர் வைக்கப்படும் சப்தம்.

வினோத் எழுந்து விருட்டென்று தனது எமர்ஜென்ஸி கிட்டை எடுத்து வராந்தாவுக்கு ஓடிப் படிகளில் தடதடவாக மறைந்தான். வாசலில் சின்ன மழை பெய்திருந்தது. ஸ்கூட்டர் முத்துக் குளித்திருந்தது. டபாக் என்று ஸ்டாண்டைக் கழற்றி ஒரு பளிச் உதையில் உறுமவைத்து, தெரு வழியே பெரிய ஸூம்ம்ம் விட்டுக் கொண்டு போனான்.

இருட்டி விட்டிருந்தது.

சாலையில் விளக்குகள் பூத்திருந்தன. சின்னத் தூறல் போலும். தரையெல்லாம் வியர்த்து விட்டது போல் கசகசப்பு. இருமருங்கும் ஜனங்கள் அவசரமிடும் ஜாடை. தணுத்த காற்று மேற்கேயிருந்து பறந்து வந்தது.

திருமலைரோட்டில் திரும்பியதும், ஸ்கூட்டர் பறக்கும் குதிரையாகச்சாட, இருபுறமும் கட்டிடங்கள் விஸ் விஸ்ஸென்று விரைந்தன.

வள்ளுவர் கோட்டம் தெரிந்த மாத்திரத்தில் மறைந்தது. நெருக்கமான நுங்கம்பாக்கம் சாலையில் ஜனத் திரள்கள் அத்தனையும் கடுகுகளாகச் சிதறின. ஜிலு என்று வெளிச்சத்தைப் பீச்சினான். கைவிரலை சதா கீச்சான் பட்டனில் அழுத்தினான். ஸ்கூட்டர் விமான இரைச்சல் போட்டு முன்னதாகவே எல்லோரையும் விலக்கி, காற்றோடு பிய்த்துக் கொண்டிருந்தது.

ஸ்டர்லிங் ரோடு வளைவுகளில் க்ராண்ட் பிரிக்ஸ் போல் வெறும் காடுகளாக ஓடியது.

பக்கத்துக் காம்பவுண்டுகள் பலமாக ஓசையை மோதிவிட்டன.

கூவம் தெரிந்தபோதுதான் அந்த மார்ஷல் அபார்ட்மெண்ட் தனித்து ஒரு நியூயார்க் கட்டிடமாகத் தெரிந்தது. 12 மாடிகள் இருக்கும். இரவில் தீப ஸ்தம்பக் காட்சி! கண் கண்ணாக வெளிச்சச் சட்டங்கள். எத்தனை தரம் பார்த்திருக்கிறான்! அதைப் பார்க்கும் போது எத்தனை முறை அதில் தீப்பற்றியது போல் அனாவசிய நினைவு நினைத்திருக்கிறான்.

ஆ!

காலேஜ் சாலை திரும்பும் பாலத்தில் நெரிசல் உருவாகி இருந்தது. வாகனங்கள் அடைத்துக் கொண்டு நின்றன. பீம் பாம் என்று குழல்கள் ஒலிறின. கோபத்துடன் விநோத் இறங்கினான்.

பால மறு நுனியில் விபத்து போலத் தெரிந்தது. விசாரித்தான். நிஜம் என்று தெரிய, கையையும் காலையும் உதறினான். ஒரு பெண் ஆபத்தில் இருக்கிறாள். அதோ, அங்கே! ஆனால் அவனால் அங்கே போக முடியவில்லை.

ஸ்கூட்டரை இழுத்து பிளாட்பார மரத்தடியில் நிற்பித்தான். இரண்டு பூட்டுக்களைப் போட்டான். பாலத்தை நோக்கி ஓடினான். எக்கச்சக்க நெரிசல், ஒரு கார் பின்புறம் ஏறித் தலைக்குப் போனான். அடுத்த காரின் தலைக்குத் தாவினான்.

யோவ்! யோவ்! என்று குரல்கள்.

பெல்மாண்டோ ஓடினால் மட்டும் பார்த்துக்கிட்டிருப்பீங்க. நான் போனா காருக்கு வலிக்குதா,

லாரி, வேன், கார் எல்லாவற்றிலுமாகத் தாண்டி அடுத்த புறம் குதித்தான்.

பாந்தியன் ரோட்டில் இடது புறமாகத் திரும்பி, அந்த மார்ஷல் அபார்ட்மெண்டை நெருங்கினான்.

திரும்பியும் சோதனை.

ஒரு வட இந்தியப் பண்டிகை கோஷ்டி நீண்ட வாலோடு அந்தக் கட்டடத்து வாயுள் போய்க் கொண்டிருந்தது. குழல் விளக்குகள் இருட்டின் ஹைஃபன்களாகத் தெரிந்தன. பின்னாடி வந்த ஜெனரேட்டர் பட்பட் என்று போர் முழங்கியது.

பலரை முண்டி இச்சு இச்சுக்களைக் கிளப்பி, லிஃப்ட் போய்ச் சேர்ந்த போது, 'இன்று சேவை இல்லை' போர்டு தொங்கியது.

படிக்கட்டில் பாய, ஏற்கெனவே அந்தக் கோஷ்டியின் நுனி அதில் ஏறி இருந்தது.

"அட நில்லுங்கோ, நில்லுங்கோ ஸார்" பல இந்திக்காரர்கள் கூவ, அழகான பெண்களையும் பாராது முரண்டிக் கொண்டு முதல் தளத்திற்கு ஓடினான்.

அங்கே ஃப்ளாட் நம்பர்கள் இருபதில் ஆரம்பிக்க, ஐந்து மாடிகளைத் தாண்டி ஐம்பத்து நான்கைக் கண்டுபிடித்தான்.

அவ்வளவு உயரத்தில் ஒரு நிசப்தம். வராந்தா பெருக்கிவிட்ட சூன்யம்! கதவை நோக்கி நடந்தபோது மனத்தில் ஒரு துணுக்கம்.

கதவு அழகாக மூடப்பட்டிருந்தது.

இரண்டு விநாடித் துடிப்புகள் நின்றன.

காது அந்தக் கதவைத் தாண்டி சப்தத்தைக் கிரகிக்க முயன்றது.

வீண். எந்தச் சத்தமும் இல்லை. சலனமும் இல்லை.

மேலே பார்த்து அழைப்பு மணியை அமிழ்த்தினான். உள்ளே எழுந்த ட்ர்ர்ர்ரிங்கை அவன் ஏற்கெனவே கேட்டிருந்தான். அந்தப் பெண்ணோடு போன் பேசியபோது கடைசியாகக் கேட்ட சப்தம் அதுதான்.

பதில் இல்லை.

குரலும் இல்லை.

கதவை அழுத்தினான். எதிர்பார்த்தது போல் திறந்தது. ஒரு பதுக்கப்பட்ட காற்றின் வாடை முதலில் அடித்தது. அதைத் தொடர்ந்து நுட்பமாக நுகர்ந்தான். எதுவும் தெரியவில்லை.

உள்ளே ஒரு இருட்டு குழைந்தது. மர்மமான இருட்டு. அதைப் போலப் பல தடவை பார்த்திருக்கிறான்.

அந்த இருட்டு எதை மறைத்திருக்கும்... தெரியும். மனம் தனியாக பிரார்த்தனை செய்தது. 'கடவுளே! அந்தப் பெண்ணுக்கு எதுவும் நடந்திருக்கக் கூடாதே.'

என்ன அழகான குரல் அவளுக்கு. மிருதுவான சங்கீதம் போல இருந்தது. அந்தப் பரபரப்பில் கூட அதன் உண்மை இயல்பு தெரிந்தது.

"சஞ்சலா! சஞ்சலா!" ஒரு அடி உள்ளே வைத்தான்.

பதில் வரவில்லை.

பாக்கெட்டுள் கையைச் செலுத்திப் பென்ஸில் டார்ச்சை வெளியே எடுத்தான். நோக்கமில்லாமல் அமிழ்த்த, ஒரு கதிர்க்குழல் வெறுமை ஹாலைக் காண்பித்தது.

பக்கவாட்டில் ஸ்விட்ச் போர்ட் சுவரில் பதிந்திருந்தது. விர்ர்ரிட்டென்று வரிசையை அழுத்தினான். விளக்குகள் பல எரிந்தன. அந்த அறை வெளிச்ச மயமாகியது.

கிட்டதட்ட சமையல் அறை வரை வெளிச்சச் சாயல் விவரித்தது.

ஒரு ஜீவன் இல்லை. "சஞ்சலா!" என்றான்.

வார்த்தை பாதி விழுங்கியது. பாதி நிசப்தத்தில் மறைந்தது. அதுவும் அவன் எதிர்பார்த்ததுதான்.

அவனது மனம் முடிவு செய்தது. இரண்டு அறைகள் அங்கே இருந்தன. அதற்குள்தான் அவள் இருக்கவேண்டும். அல்லது முடிந்திருக்க

வேண்டும்.

"சஞ்சலா!"

சற்று விறைப்பாக அழைத்தான். அறையை நோக்கி அடி வைக்க வலது புறம் சோபாவுக்கு அடுத்து ஸ்டாண்டில் டெலிபோன் தெரிந்தது. அதன் ரிஸீவர் போனை விட்டுக் கீழே கிடந்தது.

அருகில் போய் போனை உற்றுப் பார்த்தான். கர்ச்சீப்பைக் கையில் சுற்றி ரிஸீவரை எடுத்து போனில் வைத்தான். தரையைப் பார்த்தான். எதுவும் அசம்பாவிதம் தெரியவில்லை.

முதல் அறை படுக்கை அறை உள்ளே போய் விளக்கைப் போட்டபோது அது சூன்யமாக இருந்தது. பாத்ரூம் ஒட்டியிருந்தது. திறந்து பார்த்தான். பூஜ்யம்.

இரண்டாவது அறையில் நிச்சயம் இருக்க வேண்டும்.

திறந்து பார்த்தான். மேஜை நாற்காலி போட்டு உபரி படுக்கை அறையாக இருந்தது. அதற்கும் பாத்ரூம் இருந்தது. உள்ளே யாரும் இல்லை.

என்ன ஆச்சரியம்! சஞ்சலா எங்கே? இங்கேயிருந்தா போன் செய்தாள்?

வெளியில் வந்து அந்த ஃப்ளாட் பூராவையும் தேடினான்.

பர்னிசர்களுக்கு அடியில் குனிந்து பார்த்தான்.



முழுவதும் சந்தன மரத்தால் உருவாக்கப்பட்ட இந்த விநாயகர் சிலையின் விலை ரூ. 81 லட்சம். சென்னை அண்ணாசாலையில் உள்ள வி.டி.ஜ. நிறுவனத்தில் இது விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது.

– க.ரவீந்திரன்

சஞ்சலாவைக் காணவில்லை.

ஒருவேளை எல்லாம் ஏமாற்றோ?

'ஒருவேளை அந்தப் பெண்ணுக்கு எதுவும் நேரவில்லையோ! கீழே பண்டிகை வீட்டுக்குப் போயிருப்பாளோ'

'இல்லை! மனம் கேட்கவில்லை. இரண்டு விஷயங்கள் மனதை அரித்தன. ஒன்று வாயிற் கதவு பூட்டியிருக்கவில்லை. இரண்டாவது போன் ரிஸீவர் போனின் மீது இல்லை.

ஏதோ நடந்திருக்கிறது என்பது உண்மை.

அவளைக் கடத்திக் கொண்டு போயிருப்பார்களோ.

அப்படியானால் சீக்கிரம் ஏதாவது செய்ய வேண்டும். போலீஸிடம் தெரிவித்துவிட்டு அவன் பாட்டுக்கு நிம்மதியாக ஆபீசுக்கோ, வீட்டுக்கோ போய்விடலாம்.'

வாயிலை நோக்கித் திரும்பினான். அப்போதுதான் அந்த நுண்ணிய இயக்கம் தெரிந்தது.

என்ன?

சமையல் அறைச் சுவரில் ஏதோ ஓடுவது போல். பல்லியா? வேறு ஜந்துவா? விருட்டென்று கீழ் நோக்கிப் பாய்ந்ததே.

பார்க்க விரும்பவில்லை. அரை மனத்தோடு மேலே போனான். ஆனால் அவனது சீஃப் மேஜர் மாணிக்கின் எச்சரிக்கை நினைவுக்கு வந்தது. இண்டர்நேஷனல் டிடெக்டிவ் ஏஜென்ஸியின் உரிமையாளர் அவர். ஒரு அற்ப விஷயத்தில் மனத்தில் உறுத்தல் இருந்தாலும் அதைப் பார்த்து விட வேண்டும்.

திரும்பி, சமையலறை நோக்கி நடந்தான். சின்ன அறைதான். ஹாலிலிருந்து பார்த்தாலே நிர்வாணமாகத் தெரிந்தது. சுவர் பளபள வெள்ளையில் விசிறியது. அதை நோக்கி நடந்தான்.

அறை ஸ்பஷ்டமாக இருந்தது. சுத்தம், ஒழுங்கு, கடப்பைக்கல் மேடை.

மேடைக்கு அடியில் இரு கதவுகள் பொருத்தப்பட்டிருந்தன. வெறும் சாமான்கள் வைக்கும் இடம். ஊகம் எதற்கு? திறந்து பார்த்தான். அவன் நினைத்தது சரி. ஜாடிகள், டப்பாக்கள், பாத்திரங்கள்.

தலை நிமிரும் போது மீண்டும் ஒரு விருட்.

சுவரில் ஏதோ பாய்ந்து ஓடியது. இந்த முறை அதன் வேகம் அவன் மனத்தில் கணிப்போடு விழுந்தது. பார்ப்பதற்குள் அது ஓடி விட்டது. நிச்சயம் ஒரு ஜந்துவின் வேகமாக இராது. வேறு என்ன?

சுவரில் ஓடியதாகவும் இல்லை. சற்றுத் தள்ளி அந்தரத்தில் கீழே உதிர்ந்த மாதிரியும் இருந்தது.

பெரிய காஸ் அடுப்பின் பின்னால் பார்த்தான்.

உதடு மடிந்தது.

அங்கே ஒரு சின்ன குளம் தங்கி இருந்தது. எண்ணெயா? தண்ணீரா?

ஆட்காட்டி விரலை அதில் வைக்க, 'சொட்'டென்று ஒரு கொட்டு கையில் விழ, விருட்டென்று இழுத்துப் பார்க்க... ரத்தம்.

திடுக்கிட்டு மேலே நோக்க, அது என்ன! புகைக் கூண்டில் ஒரு அடைசல்!

டார்ச்சை எடுத்து அடித்தான்.

ஏதோ துணியை அடைத்திருந்தார்கள். துணி அல்ல! ஸாரி! அது என்ன?

கால் செல்லரித்து, சில விநாடித் தயக்கம்! பிறகு பல்லைக் கடித்துக் கொண்டு மேடை மீது ஏறினான். புகைக் கூண்டுக்குள் கையைச் செலுத்தினான்.

கூண்டின் துவாரம் ஒரு அடி இரண்டு அடி இருக்கும். அதில் ஒரு உடல் செருகப்பட்டிருந்தது.

ஸாரியை இழுத்தான். காலை இழுத்தான். தொப்பென்று விழும் என்று எதிர்பார்த்தான். விழவில்லை. அவ்வளவு அழுத்தமாகச் செருகப்பட்டிருந்தது.

அவ்வளவு எளிதில் வராது என்ற தெரிந்தது. முழு வலுவை உபயோகித்தும், உடல் வரவில்லை. கீக்கிடமான இடத்தில் எக்கச்சக்க மாகச் சிக்கியிருந்தது.

'என்ன புத்திசாலித்தனம்! உடலை மறைப்பதற்கு இதுதான் இடமா?" என்று எண்ணிக் கொண்டு அவன் மேலும் பிரயாசைப்படத் தொடங்கினான்.

சில நிமிடங்களுக்குப் பிறகுதான் அது இடம் பெயர ஆரம்பித்தது. அங்குலம் அங்குலமாக நகர்ந்தது.

கடைசியில் அவன் எதிர்பார்த்த 'தொப்'பில் விழுந்தது.

சுற்றி வரத் துணிகள் பல விழுந்தன. உடலைச் செருகி நிறுத்தி வைப்பதற்கு அவன் உபயோகப்படுத்தியவை.

# 2

இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் வந்த போது வினோத் பெரிய அலங்கோலத்தில் இருந்தான்.

மேலெல்லாம் அடுப்புக்கரியும் அழுக்கும் ஒட்டியிருந்தன. சட்டையில் ரத்தக்கறை திட்டு திட்டாக இருந்தது. கலைந்து தண்ணீரில நனைந்த கோழி போல் இருந்தான்.

சமையலறைத் தரையில் ஒரு பெண்ணின் உடல் நீட்டமாக வடிக்கப்பட்டிருந்தது.

அவள் உடுத்தியிருந்த ஆரஞ்சு ஸாரி பூராவும் கரியும் ரத்தமுமாக இருந்தது.

கண் இலேசாகப் பாதி செருகி இருந்தது. நாக்கு சற்று வெளியே வந்திருந்தது. வாய் வழியே ரத்தம் ஒழுகியிருந்தது. உடம்பு பூராவிலும் ஒரு சுழற்சி இருந்தது.

"மிஸ்டர் வினோத்! நீங்க அதிகப்பிரசங்கித்தனம் பண்ணியிருக்கீங்க!" என்றார் ஆறுமுகம்.

அவர் முகம் கடுமையாக இருந்தது.

"என்ன அப்படிச் சொல்றீங்க?" என்று கூர்மையாகக் கேட்டான் வினோத்.

"எங்களுக்கு அறிவிக்காமல் நீங்க இங்கே வரலாமா?"

"ஏன்! என்னைக் கூப்பிட்டாங்க, வரேன்!"

"அப்போ நீங்கதான் கொலை செஞ்சீங்கன்னு நாங்க சொல்லலாமில்லே."

"ஓ!" என்று ஒரு துபக்கம் காட்டினான் வினோத். "தாராளமாகச் சொல்லுங்க! அரெஸ்ட் வேணுமின்னா பண்ணிக் கொண்டு போங்க!"

"இந்த மேல் பூச்செல்லாம் வேணாம். உங்களை யாருன்னு தெரியும். நாங்க விட்டுருவோம். தெரியாதவங்களாக இருந்தா மாட்டியிருப்போம். இப்போ தடயத்தை எல்லாம் குட்டிச் சுவர் பண்ணிட்டீங்களே!"

"என்ன தடயம்?"

"எங்களுக்குச் சடலம் எங்கே இருந்ததோ, அங்கேதான் இருக்கணும்"

"ஓகோ! நான் கீழே இறக்கினது தப்பா?"

"தப்புத்தான்."

"இன்ஸ்பெக்டர்! சூழ்நிலையை நல்லாத் தெரிஞ்சுக்கிட்டுப்

பேசுங்க."

"என்ன தெரியலை. என்னத்தைப் பெரிசா சொல்ல வந்துட்டீங்க?"

"உடம்பிலேர்ந்து ஒழுகிறதுன்னா என்ன அர்த்தம்?"

"என்ன அர்த்தம்?" என்று பதிலுக்கு ஏளனமாகக் கேட்டார் ஆறுமுகம்.

"இன்னும் உயிர் இருக்குன்னு அர்த்தம். உயிரோட ஒருத்தர் இருந்தாங்கன்னா அவங்களைக் காப்பாற்றி ஆஸ்பத்திரி சேர்க்கிறது என் கடமை! அதை நீங்க தடுக்க முடியாது! முதல்லே உயிர்! அப்புறம்தான் கேஸ்!"

"இறக்கி வச்சீங்களே, உயிர் இருந்திச்சா?"

"இல்லை! கொஞ்சம் முன்னாடி இறந்திருக்கணும். ஸாரியிலேர்ந்து ரத்தம் ஒழுகிக்கிட்டிருந்திருக்கு. இது எப்போ தெரியும். கீழே இறக்கினப்புறம் தானே தெரியும்?"

அவரை மடக்கும்படி வினோத் பதில் சொன்னது ஆறுமுகத்திற்குப் பிடிக்கவில்லை.

"அப்புறம் போனை எடுத்துப் பேசியிருக்கீங்க!"

"கர்ச்சீப் சுற்றிக்கிட்டுத்தான் எடுத்தேன். உங்களைவிட நாங்க எச்சரிக்கையாக இருப்போம் ஸார்."

ஆறுமுகத்தால் உடனே பேச முடியவில்லை. இருந்தாலும் தனது அதிருப்தியைக் காண்பிப்பதற்காகவே, "நீங்க ஸ்டேஷன் வர வேண்டி இருக்கும்" என்றார் தலையைக் குனிந்து கொண்டு.

"நானா?"

"ஆமாம்."

"ஏன்? உங்களுக்கு முதல் ரிப்போர்ட் கொடுத்ததற்கா? சடலத்தைத் தேடிப் பிடிச்சுக் கொடுத்ததற்கா?"

"ஏன்? எங்களாலே கண்டுபிடிக்க முடியாதா?"

"இருக்கும். வெளியே வந்தப்புறம் கண்டுபிடிப்பீங்க"

ஆறுமுகம் மேலே பேசவில்லை. வீட்டிலுள்ள பீரோ, மேஜை, அலமாரி எல்லாவற்றிலும் ஸீல் வைக்கச் சொன்னார் ஒரு கான்ஸ்டபிளிடம்!

இன்னொருத்தரை அழைத்து சடலத்தின் உடைகளைக் களையச் சொன்னார்.

பிறகு சூடாக, "நாளைக்கு நான் மேலிடத்திற்குத் தெரிவிக்கப் போறேன், இப்படி பிரைவேட், ஏஜென்ஸிங்க வந்து எங்க வேலையிலே

குறுக்கிடறாங்கன்னு.

கத்திபோல் நிமிர்த்தான் வினோத். "தனியார் ஏஜென்ஸி இல்லே! அந்த பெண்ணுக்கு ஆபத்து வந்திரிச்சு! அவங்களுக்கு என்னைக் கூப்பிடணுன்னு தோணிச்சு! கூப்பிட்டாங்க! நாங்க உதவி செய்யப் போனோம்! இதை எந்த அரசாங்க இலாகாவும் தடுக்க முடியாது!"

சஞ்சலாவின் உடல் மின்னியது. பால் போல சருமம். மேலே இரு அழகான வட்டங்கள்! சற்றுக் கருத்துப் பொறுக்குத் துட்டியது போல் காம்புகள். பிடித்து விட்ட இடை! நல்ல குழிவிட்டுத் தெரிந்த நாபி! அதற்குக் கீழே, பசபசவென்று மெல்லிய பூனை உரோமங்கள், ஒரு படிமம் படிந்து, படிப்படியாக இறங்கி...

இன்ஸ்பெக்டர் அந்த பாகத்தைக் குறிப்பாகக் கவனித்தார். பலாத்காரம் நடந்திருக்குமா? அதன் குறிகள் தென்படுகின்றனவா? நகக்கீறல் அல்லது சிறாய்ப்பு, பெண் குறியில் ரத்தம், அல்லது ஆணின் வீரியம்...

கழுத்தில் இரண்டு இடம் கன்னி இருந்தது. விரல்களின் அழுத்தமாக இருக்க வேண்டும். ஆனால் வாயில் எப்படி ரத்தம்?

இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் சடலத்தைக் கவனித்துக் குறிப்பு எடுத்துக் கொண்டிருக்கும் போதே. வினோத் அவைகளைக் கவனித்து மனக்குறிப்பு எடுத்துக் கொண்டிருந்தான்.

முதலில் முகத்தின் முன் பக்கம் அடித்திருக்கிறான். ஆளை மயக்கமாக்குவதற்கு... அல்லது பிரமிக்க வைப்பதற்கு அப்படிச் செய்வார்கள்.

இங்கே குற்றவாளி அவளை அப்படி அடித்துவிட்டு, பிறகு கழுத்தை அமுக்கத் தொடங்கி இருக்கிறான்.

அடித்த வேகத்தில் பல் உதிர்ந்து ரத்தம் வந்திருக்கிறது.

இன்ஸ்பெக்டர் சடலத்தைப் புரட்டிப் போட்டுப் பார்த்தார்.

இந்தச் சமயத்தில் கூட்டத்தில் ஒரு சலசலப்பு ஏற்பட, ஏராளமாக சத்தம் போட்டுக் கொண்டு ஒரு வயதான மனிதர் கைத்தடியுடன் உள்ளே வந்தார்.

வினோத்தைப் பார்த்ததும் அவர், "இது என்ன? நவராத்திரி வேஷம் போட்டுகிட்டு வந்திருக்கியா? போய் வேறே சட்டை பாண்ட் போட்டிருக்கக் கூடாது? என்றார் கோபமுடன்.

வந்திருந்தவர் மேஜர் மாணிக்!

நரைத்துப் போன மீசை, சன்னமாகப் போயிருந்த தலைரோமம் சின்ன காற்றுக்குக் கூடப் புயலில் அடிப்பட்டது போல ஆடின! வாய் சிறுத்து வாத்துப் போல் இருந்தது. தமது கண்ணாடி வழியே ஒரு கீழ்

பார்வை பார்த்து, பேசினால் தடியைத் தூக்குவேன் நிலையில் ஸ்டில் போட்டோவுக்குப் போஸ் கொடுத்தவர் போல நின்றிருந்தார்.

"ஸார்! நான் போகத் தயாராக இருந்தேன். இன்ஸ்பெக்டர் விடவில்லை."

"ஏன்? என்ன விஷயம்?"

"ஸ்டேஷனுக்கு நான் வரணும் என்கிறார்"

"எதுக்கு? எதுக்கு?"

மேஜருக்கு ஜுரம் ஏறியது. வினோத் விவரித்தான். ஒவ்வொரு வாக்கியமாகக் கேட்கக் கேட்க, அவர் முகம் காட்டேரியாகச் சிவப்பு ஏறியது.

"மிஸ்டர் ராம நேயம்! ராம நேயம்!" என்றார்.

"எஸ் ஸார்! என்று காக்கி யூனிபார்ம் தரித்த ஒரு ஐம்பது வயது நபர் உள்ளே வந்தார்.

அஸிஸ்டெண்ட் கமிஷனரைப் பார்த்ததும் இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் எழுந்து ஸல்யூட் அடித்தார்.

'You see! my man has done something wonderful'

... என்று ஆரம்பித்து நடந்ததை எல்லாம் இழைப்புடன் தெரிவித்தார் மேஜர் மாணிக்!

தொடர்ந்து முடிக்கும்போது, "இப்போதே பொது ஜனம் உங்களுக்கு உதவி செய்யறதில்லைன்னு கத்தறீங்க!

## கவிதைகள்

### தூறல்

ஆசை ஆசையாய்
சன்னலுக்குள் நுழைந்த
தென்றல் காற்றை
விரட்டி அடித்தது...
வீட்டிற்குள் சுழலும்
மின்விசிறி!

- பொதக்குடி 'வெற்றிமுரசு

### தாலி!

இரண்டு பெண்கள்
தாலி வாங்க
ஏங்கினார்கள்...!
ஒருத்தி – மாப்பிள்ளையிடம்...
மற்றொருத்தி – மார்வாடியிடம்...!

***

### வெற்றி!

இளைஞனே!
துவளாதே...
அசைக்க முடியாத
நம்பிக்கையே
உன்னுடைய
மூலதனம்!
நேர்மையான
உழைப்பு,
நீ போடும்
அசல்!
நீ ஈட்டும்
வெற்றி,
உன் பெட்டகத்தை
நிரப்பும்
வட்டி!

- போளூர் சி.ரகுபதி

எப்படி உதவிக்கு வருவான்? விஷயங்கள் தெரிஞ்ச எங்களையே உங்க இன்ஸ்பெக்டர் இப்படி வாட்டினார்னா நாளைக்குப் பாமர பொதுஜனத்தை என்ன மாட்டு மாட்டுவார்?

கேள்வியை மேலே தூக்கிப் போட்டு அதன் பலாபலன்களைச் சுற்றி இருக்கிறவர்களிடம் காண விரும்புவர் போல் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் திரும்பிப் பார்த்தார் அவர்.

ஏ.ஸி. ராமநேயம் நெற்றிச் சுருக்கத்தோடு இன்ஸ்பெக்டர் பக்கம் போனார். "ஏன் மிஸ்டர் ஆறுமுகம்! நீங்க இப்படிச் செய்யலாமா? இவங்க ஏஜென்ஸியைப் போலீஸே அங்கீகாரம் பண்ணியிருக்கு. அவங்க முறையாத்தான் நடந்துக்குவாங்க! நமக்கு உதவி செய்வாங்க தவிர, ஒரு சின்ன உபத்திரவம் கூடச் செய்ய மாட்டாங்க! நீங்க அவங்களுக்கே கடுக்காய் கொடுக்கலாமா?" என்று நியாயத்தை எடுத்துச் சொன்னார் அவர்.

ஆறுமுகம் சற்றே தலை குனிந்து, "ஸாரி?" என்று மெலிதாக சொன்னார்.

"இந்தாங்க! வினோத்! இன்ஸ்பெக்டர்கிட்டே கையை குலுக்கிட்டுப் போங்க!" என்றார் ஏ.ஸி.

வினோத் தானாக முன்னேறி ஆறுமுகத்திடம் கையை நீட்டினான். இருவரும் புன்னகையோடு குலுக்கினார்கள்.



**சோ**னம் கபூர் நடித்த முதல் இரண்டு படங்கள் தோல்வியை தழுவின. அவர் நடித்து வெளிவந்துள்ள 'ஆயிஷா' அவருக்கு ஹாலிவுட் வாய்ப்புகளை தேடித்தந்துள்ளது. தோல்விதானே வெற்றிக்கு முதல்படி என்கிறீர்களா?

- க.ரவீந்திரன்

“மிஸ்டர் வினோத்! என்றார் ராமநேயம்.

“எஸ் ஸார்!”

“நாங்க டிபார்ட்மெண்ட் வழியா சில வரைமுறையில்தான் நடக்க முடியும். நீங்க கொஞ்சம் தாராளமாக நடந்துக்க முடியும்! இந்தக் கேஸை நீங்களும் விசாரியுங்க! உங்களுக்கு ஏதாவது விஷயம் கிடைச்சுதுன்னா சொல்லுங்க! எங்களுக்குக் கிடைச்சாலும் பகிரிந்துக்கிடறோம்” என்றார்.

“எஸ் ஸார்!” என்றார் வினோத்.

“வினோத்! உடனே போய், குளிச்சு சட்டையை மாற்று, சட்டையை அப்படியே பத்திரமா வச்சிடு!” என்றார் மாணிக்.

வினோத் புறப்பட்டான்.

இரண்டு நாட்கள் வினோத் கவலை மறந்து இருந்தான்.

பேப்பர்கள் அந்தக் கொலையைப் பற்றிப் பத்தி பத்தியாகச் செய்திகளை போட்டன. வினோத்தின் கடமை உணர்ச்சிகளைச் சில பத்திரிகைகள் பாராட்டின.

நம்பர் நூறு டயல் செய்ததில், அது கிடைக்காமல் போனதற்கு டெலிபோன் இலாகாவைப் பல பத்திரிகைகள் மோசமாக விமர்சித்தன.

சீக்கிரத்தில் விசாரணை செய்து, குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று இதுவரை கண்டுபிடிக்கப்படாத பல கேஸ்களை காண்பித்திருந்தது ஒரு பத்திரிகை.

வினோத் எல்லாவற்றையும் படித்து, நிச்சிந்தையாக இருந்தான்.

மனம் மட்டும் அடிக்கடி சஞ்சரித்தது. அந்தப் பெண்ணின் குரல் அவளது இயல் தொனியில் மனத்தில் பதிந்திருந்தது.

அந்தத் தொனியின் அழகு அவனை மிகவும் வசீகரித்திருந்தது.

அவளைப் பாதுகாக்க ஓடியபோது அவள் இன்னின்ன அழகியாக இருப்பாள் என்று அவன் கற்பனை செய்திருந்தான். ஆனால் நேரிலே பார்த்தபோது, அதைவிட அழகாக இருந்தாள்.

இவ்வளவுக்கும் அவன் பார்த்தது அவளது சடலம்தான். உயிருடன் பார்த்திருந்தால் எப்படி இருந்திருப்பாளோ! லாரா... இவ்வளவு மினுக்குகிறாளே அவள் கால் தூசி பெற மாட்டாள்.

பாவம்! அநியாயமாக இறந்துவிட்டாள். இன்னும் ஒரு பத்து நிமிடம் முன்னால் போயிருந்தால் அவளைக் காப்பாற்றியிருக்கலாம். அது முடியாமல் போய்விட்டது. போகிற வழியில் எத்தனை இடைஞ்சல்கள்!

அன்றைக்கு அவன் ஸ்கூட்டர் கிடைத்த பாடே பெரிய பாடு.

'நோ! நான் ஸ்கூட்டரை இன்னும் விரட்டி, ஓட்டியிருக்கலாம்! இறங்கி நடந்தபோது நேரமாகி விட்டது. கார் தலைகள் வழியாக பெல்மாண்டோ ஓடலாம்! அவனால் ஓட முடியுமா? தாவித் தாவிக் கீழே விழாமல் போவதற்குள் நாழி ஆகிவிட்டது.

சரியான நேரத்தில் அவன் போகாததால் ஒரு உயிர், ஒரு அழகான உயிர் இந்த உலகத்திற்கு இழப்பாகி விட்டது.

அவனுக்கு அது சொந்தப் பொறுப்பு போல் ஒரு சோகமே ஏற்பட்டுவிட்டது.

மூன்றாம் நாள் மாலை அவனுக்கு ஒரு போன் கால் வந்தது. லாரா சிரித்துக் கொண்டு அவனிடம் கொடுத்தாள். இந்த முறை பரபரப்பும் இல்லை. பட்டன் கழன்றிருக்கவுமில்லை.

"ஹல்லோ?"

"நீங்க மிஸ்டர் வினோத் தானே?"

ஒரு பெண் குரல் இனிமையாக வழிந்தது.

"ஆமாங்க!"

"என் பெயர் உதயா!"

"சரி."

"உங்ககிட்ட ஒரு ரகசியம் சொல்லப் போறேன். அதைக் காப்பாற்றுவீங்களா?"

"ரகசியத்தின் தரத்தைப் பொறுத்திருக்கு."

"அப்படிச் சொல்லக் கூடாது. நிச்சயம் காப்பாத்தறேன்னு சொன்னா சொல்றேன்."

"சரி. காப்பத்தறேன் எதைப் பற்றி?"

"அதைப் போன்லயே சொல்லணுமா?"

"சொன்னா உற்சாகமா இருக்கும்."

"சஞ்சலா தெரியுமில்லே! கொலை ஆனாளே!"

"அவளைப் பற்றியா?"

"ஆமாம்!"

"போன்லே சொல்லாம எப்படிச் சொல்லப் போறீங்க?"

"ஹோட்டல் விஸ்வாவுக்கு 5.30க்கு வாங்க!"

"சரி"

"லவுஞ்சிலே காத்திருப்பேன்."

"ரைட்."

போனைக் கீழே வைத்தான்! இடத்திற்குப் போனான். லாராவைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. பார்த்தான். அவள் முகத்தில் பரிகாசச் சிரிப்பு பொம்மிக் கொண்டிருந்தது. ஒரு பெண் பேசினாள் அவளுக்குத் தெரியும்.

"என்கேஜ்மெண்டா?" என்றாள்.

ஆத்திரம் வந்தது. பல்லைக் கடித்து – ஒருநாள் மட்டும் இவ அகப்பட்டாள்ன்னா என்று கறுவினான்.

ஆத்திரம் நேரம் மீந்திருக்கவில்லை. எழுந்து பாத்ரூமுக்கு போய் விரில் போட்டு முகம் கழுவி, பூத்துவாலையால் பப் பப் பப் என்று முகத்தை ஒத்தி எடுத்து, பர்ஸில் வைத்திருந்த பவுடரை முகத்தில் சிலு சிலு என்று தடவி, திரும்பி ஆபீஸ் அறைக்கு வந்தான்.

"லாரா வரேன்! ஹோட்டல் விஸ்வா லவுஞ்சிலே உதயா என்கிற பெண்ணை சந்திக்கிறேன். சஞ்சலா கேஸ் சம்பந்தமா!" என்று சொல்லி மாடிப்படிகளில் தடதடவென்று இறங்கினான்.

ஸ்கூட்டரைக் கிளப்பி, சாலைகளில் வழுவி, அந்த பிரம்மாண்ட ஐந்து நட்த்திரத்தை அடைந்த போது,

முகப்புப் பரந்த வெளியில் அடித்த நீரூற்று மென்மையான குளியை அவனுக்குக் கொடுத்தது.

மனசில் சிருங்கார உணர்ச்சிகளுடன் அந்தப் பெரிய ஹோட்டலில் லவுஞ்சில் ஏறினான்.

லவுஞ்சின் நாற்பது சீட்களில் ஆண்களைத் தவிர ஒரு பெண் இல்லை. எனவே அவன் ஒரு தனி நாற்காலியை, ஒரு சித்ர வேலைப்பாட்டுத் தூண் கீழே தேர்ந்தெடுத்துக் கொண்டான்.

உதயா எப்படி இருப்பாள் என்று ஒரு அரை நிமிடமாக நினைத்துப் பார்க்கு முன்பு ஒரு தடிமனான பெண் வெகுளியான சிரிப்புடன் அவன் முன்னால் வந்து நான்தான் உதயா என்றாள்.

அவன் சொல்வதற்கு முன் பக்கத்து சீட்டை வியாபித்து கொண்டாள்.

இருபத்தெட்டு இருக்குமா? இருக்கலாம்.

பூரணமான பெண்ணாக இருந்தாள். நிறம் கொஞ்சம் கறுப்பில் சேர்த்தி! ஆனால் அந்த மூக்கும் முகவாயும், கண்ணும், கன்னமும், செதுக்கி எடுத்தவை. லட்சணமாய், பார்த்த யாரையும் உடனே ஆகர்ஷிப்பாய்

அப்படி ஒரு சௌந்தர்ய காந்தமாக விளங்கினாள்.

இவளது மார்பைப் பார்த்தால் லாராவிடம் போய்ச் சொல்ல வேண்டும். "போ! உன்னைத் தூக்கி அடிக்கிற ஆளைப் பார்த்தாச்சு!

"நீங்க மிஸ் உதயாவா?" என்றான்.

"ஆமாம்!" என்று புன்னகை சின்ன விளிம்பாகக் காட்டினாள்.

"நான் வினோத்!" நீங்க என்ன சொல்லப் போகிறீங்க? என்று நேராக விஷயத்துக்குப் பாய்ந்தான்.

அவள் மலையாளி என்று கண்ணில், கூந்தலிலும் தெரிந்தது. "என் சிநேகிதிதான் சஞ்சலா! என்றாள். அவளுடைய டயரி என்னிடம் இருக்கு. எனக்குத் தமிழ் வாசிக்கத் தெரியும். டயரியிலே ஏகப்பட்ட விஷயம் சொல்லியிருக்கு. நீங்கள் படிச்சால் உங்களுக்கு உதவலாம்!" என்றாள்.

"சஞ்சலா டயரி எழுதினாளா?"

"ஆமாம்! தினக்கே எழுதுவாள்! ஏதாவது எழுதிக்கிட்டே இருக்கணும். அவள் ஒரு எழுத்து மனுஷி."

"டயரி எப்படி உங்ககிட்டே கிடைச்சுது?"

"முந்தின திவசம் எங்க வீட்டுக்கு வந்திருந்தா. அங்கே மறந்து வச்சிட்டுப் போயிட்டாங்க!"

"ஓ! அடுத்த நாள் நீங்க ரெண்டு பேரும் சந்திக்கலையா?"

"சந்தர்ப்பம் கிடைக்கலை."

"சஞ்சலா அந்த ப்ளாட்லே தனியா இருந்தாங்களா?"

"ஆமாம்."

"சொந்தக்காரங்க யாரும் கிடையாது?"

"சொல்லும்படியா இல்லை!"

"அப்போ எப்படி வாழ்க்கை நடத்தினா? என்ன வேலை பார்த்தாங்க."

உதயாவின் முகத்தில் இருந்த புன்னகை மறைந்து தரிசையாகியது. குரலைத் தழைத்து கொண்டு, "மிஸ்டர் வினோத்! தனியா இருக்கிற பெண்ணுங்களுக்கு உத்தியோகம் என்னென்னு நேரிடையாகக் கேட்காதீங்க!" என்று கூறினாள்.

அந்த வார்த்தைகளும் அதைத் தொனித்த குரலில் கரகரப்பும் மனத்தை எங்கேயோ நெகிழ்த்தின.

திரும்ப அவள் நிமிர்ந்தபோது அவள் கண்கள் நீர்ப்பதிந்திருந்தன.

"ஏதோ வேலை! எதையாவது செய்யணும். வாழணும்! உலகத்திலே

எதையும் பூரா நல்லதுன்னு சொல்ல முடியாது. அதைப் போல பூரா கெட்டதுன்னு சொல்ல முடியாது! அதுவும் பெண் ஜென்மம் இருக்கே. சஞ்சலா ரொம்ப நல்லவள். அவள் ஒரு குடும்பத்திலே இருந்தா லட்சுமியா விளங்குவா. ஆனா யாருக்கும் கொடுத்து வைக்கலை. என்ன புத்திசாலி! என்ன பொறுமைசாலி!"

அவளது அந்த இரக்க புலம்பல்கள் சற்று நேரம் அங்கே சுழன்று கொண்டிருக்க, அவகாசம் கொடுத்தான்.

பிறகு மெதுவாக – "அவளை யார் கொலை செய்திருப்பாங்க?" என்றான்.

"யார் அந்தப் பாவி, தெரியலையே!"

"உங்களுக்கு யார் பேரிலாவது சந்தேகம் உண்டா?"

"எனக்கு யார் மீதும் இல்லை. ஆனா அந்த டயரி வாசிச்சுப் பார்த்ததிலிருந்து எனக்கு என்னவோ தோணுது?"

"என்ன தோணுது?"

"நீங்க படிச்சுப் பாருங்க! அதனாலேதான் உங்களைக் கூப்பிட்டு இதைக் கொடுக்க நினைச்சது, பின்னே போலீஸ்கிட்டே கொடுக்கவிரும்பலை.

"சரி, டயரி எங்கே?"

"இங்கே இல்லை! வீட்டிலே இருக்கு!"

"ஏன் கொண்டு வரவில்லை?"

"யாரேன் பார்த்திருந்து எடுத்திட்டுப் போயிட்டாக்கே!"

"வீடு எங்கே இருக்கு."

"இங்கேதான் ஆழ்வார்பேட்டை வரீங்களா"



**ம**லேசிய மாடலும் நடிகையுமான தனுஷ்யா 'நந்தி' என்ற படத்தில் நடிக்கிறார். தமிழ்வாணன் இயக்கும் இப்படத்தை தினேஷ் கார்த்திக் தயாரிக்கிறார்.
- க.ரவீந்திரன்

## கவிதைகள்

### கணவன்

நட்சத்திரங்களை பொறுக்கி
பையில் போட்டுக் கொண்டு
வருகிறேன் என்றவனும்
மணலை கயிறாக்க தினம்
என் ஆணைக்கு காத்திருந்தவனும்
இன்றைய தினங்களில்
நொந்து நூலான தாலிச்சரடுக்கு
மாற்றுக் கயிறும் ஃபீடில்
பாட்டிலுக்கு
நிப்பிள் வாங்கி வரவும் மறந்து
வருகிறான் தினம் தினம்!

***

### எய்ட்ஸ்

பலகாரம் கொள்வது போல்
பலதாரம் கொள்ளாதீர்!
தசரதனாய் அல்ல;
இராமனாய் வாழ்வீர்!
இல்லறக் கூரையை
இறுதிவரைப் பற்றாது
எய்ட்ஸ் எனும் நெருப்பு!

***

### தண்ணீர்

விவசாயத்திற்குத்
தண்ணீர் இல்லை
ஆனாலும்
மினரல் வாட்டருக்கும்
மில்லி குவார்ட்டருக்கும்
ஆர்டிஷியன் ஊற்றென
தண்ணீர்
கிடைப்பதில்
பஞ்சமில்லை.

- போளூர் சி.ரகுபதி

"வரேன்."

இருவரும் ஆட்டோவில் போனார்கள்.

ஆழ்வார்பேட்டையில் அந்த உள்பகுதிகள் நிசப்தமாக இருந்தன. காற்றோட்டம் கூட இல்லாமல் மரங்கள் சலனமற்று இறந்த காவற்காரர்கள் போல் நின்றன.

சின்னச் சின்ன திருப்பங்களில் வழிகாட்ட ஒரு இரட்டை மாடிக் கட்டடத்தின் முன் நிறுத்தினாள். முதல் மாடி போர்ஷனில் அவள் இருந்தாள்.

உள்ளே அழைத்துப் போனபோது, தங்கச்சி ஒருத்தி பதின் மூன்றில் பொல்லா விழி விழித்தாள். மேலே பிடிப்பாக சட்டை போட்டிருக்க. இரண்டு மிருதுவான மேடுகள் அழகா உற்பவித்திருந்தன. உயர்ந்த பாவாடையில் சுருக்கங்கள் நிறைந்திருக்க,பெரிய கூடாரமாகப் பரவி அவளுக்கு வெகு கவர்ச்சித் தோற்றம் கொடுத்தது.

உள்ளே வயதானவள் ஒருத்தி சமையலறையில் ஓசைப்படுத்திக் கொண்டிருந்தாள்.

சின்ன போர்ஷன் அது! போன் சகிதம் இருந்தது. அலமாரி மேஜை எல்லாம் சுத்தமும் சுகாதாரமும் இருந்தன.

உதயா அலமாரியிலிருந்து டயரி எடுத்துக் கொண்டு வந்தாள்.

ஒருமுறை சுர்ரென்று

விசிறிப் பார்த்தவன், "அம்மா!" என்றான். அத்தனை பக்கம் விரித்து எழுதியிருந்தாள்.

"இவ்வளவையும் எப்படி வாசிப்பேன்?" என்றான்.

"இரண்டு முழுநாள் ஆகும்! அவள் இறந்தாச்சுன்னு தெரிஞ்சதும் வாசிக்க ஆரம்பிச்சேன். கொஞ்சம் கூட நேரத்தை விடாமல் வாசிக்க ரெண்டு நாளாகும்.

அத்தனை படிக்கவேண்டுமா என்று விேனாத் மலைக்க– மலைக்காதீங்க! நீங்க மெதுவா படிக்கலாம்! ஆனா ரொம்ப முக்கியமானது என்கிறது இரண்டே இரண்ட நாள்தான். அந்தத் தேதிகளைக் குறிச்சு வச்சிருக்கேன்!" என்றாள்.

டயரியின் ஓரம் சொருகி வைத்திருந்த ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்து நீட்டினாள்.

ஒரு பெருமூச்சு வந்தது.

"பானுமதி கேஸுக்கும் இதுக்கும் சம்பந்தம் இருக்கு!" என்றாள் உதயா.

"அப்படியா?" என்றான் அவன்.

அவன் மனத்தில் அந்த எட்டு மாத முந்திய கேஸ் நன்றாக நினைவு வந்தது. பானுமதி கொலை கேஸ்! அதை இன்னும் போலீஸார் கண்டுபிடிக்கவில்லை. போலீஸ் ஃபைலில் இன்னும் தூங்குகிறது. ஒரு சின்ன துப்பு கூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

ஒரு நாகரிகக் காலனி பிளாட் ஒன்றில் நாற்பத்தைந்து வயது பானுமதி கொலை செய்யப்பட்டிருந்தாள். பல நகைகள் கொள்ளை போயின. அதில் முக்கியமானது ஒரு நவரத்தினமாலை. பல லட்சம் மதிப்புள்ளது. பானுமதி அதை எப்போதாவதுதான் லாக்கரிலிருந்து எடுத்து வந்து அணிவாள்.

போலீசார் பல முயற்சிகளைச் செய்து பார்த்தார்கள். இதுவரை கொலைகாரனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. பானுமதியின் அண்ணன் கிருஷ்ணன் லட்ச ரூபாய் பரிசு தருவதாகக் கூட வாக்களித்தார். கொள்ளைக்காரனைப் பற்றி ஒரு சின்னத் தடயம் கொடுத்தால் போதும். நோட்டீஸ் அச்சடித்து ஒட்டினார். இதுவரை ஆளைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

"நீங்க படியுங்க!" என்றாள் உதயா.

மார்ச் மூன்றாம் தேதியில் அவள் எழுதியிருந்ததை படித்தான் விேனாத்.

இன்றுபகல்ஒருமணிஅளவில்நான் ஸன்லைட் அபார்ட்மெண்ட்ஸுக்குப் போனேன். என் சிநேகிதி கீதாவைப் பார்ப்பதற்கு, அவள் என் ஹைஸ்கூல்

சிநேகிதி. நான் எப்படி வாழ்கிறேன் என்பது அவளுக்குத் தெரியாது. அவள் தந்தை பெரிய உத்தியோகத்தில் இருந்தார் என்று கேள்விப்பட்டேன். திடீரென்று நேர்ந்த ரோட்டுச் சந்திப்பில் இதைக் கூறினாள். நான் ஒரு நிறுவனத்தில் ஸேல்ஸ் வேலை செய்வதாகக் கூறினேன். ஏனெனில் எனக்குப் பயம். என் தொழிலில் நான் எங்கேயாவது ஒரு ஹோட்டல் லவுஞ்சில் காத்திருக்கலாம்! அதுவும் ஒரு அசந்தர்ப்ப வேளையில்.

அப்போது யாராவது ஏன் இங்கே இருக்கிறாய்? என்று கேட்டால் ஸேல்ஸ் ப்ரமோஷனுக்காக வந்திருக்கிறேன் என்று கூறலாமல்லவா?

உண்மையில் ஹோட்டல் லவுஞ்சுகளுக்கு ஸேல்ஸ் ப்ரமோஷனுக்காகத் தான் போகிறேன். எனது கவர்ச்சிகர பொருள்களை எல்லாம் என்னோடேயே தூக்கிச் செல்கிறேன்.

அங்கே லவுஞ்ச் சோபாவில் யாருக்கோ காத்திருப்பது போல் காத்திருப்பேன்.

யாராவது ஆண் அங்கே தனியே வருவான். என்னைப் போல் யாருக்கோ காத்திருப்பது போல் இருப்பான். உண்மையாகவும் இருக்கலாம். அவனை நான் பதினைந்து இருபது நிமிடம் கவனிப்பேன். பிறகு டைம் ப்ளீஸ்! என்று கேட்பேன். சற்று குரல் கேட்கிற தூரத்தில் தான் அவன் இருப்பான்.

டைம் சொல்லுவான். என்னைக் கொஞ்சம் கவனிப்பான். எனது கவர்ச்சி எனக்கு நன்கு தெரியும். கண்ணை என் மீது வைத்தால் எடுக்க முடியாது.

அவனுக்கு வாக்காக என் புறத்தை எதேச்சையாகத் திறந்திருப்பது போல் திறந்து வைத்திருப்பேன்.

கொஞ்சம் நுகருவான். பிறகு யாருக்காவது காத்திருக்கீங்களா? என்று கேட்பான்.

எஸ்.எஸ். வந்தாலும் வருவேன்னாங்க என்று குழம்புவேன்.

அப்போது என் கண்களை அவன் மீது வீசி மோகனங்களைக் காட்டுவேன். இதெல்லாம் இங்கே இவர்களோடு கற்றது.

அவனால் என் கண் அழைப்பைப் பொறுக்க முடியாது.

அப்போது அவன், "வாங்களேன்! ஒரு காப்பி சாப்பிட்டு வரலாம்.போர் அடிக்கிறது" என்பான்.

இருவரும் காபி ஷாப்பில் நுழைவோம். பேசிக்கொண்டே சாப்பிடுவோம். நாலு வார்த்தைகள் பேசுவதற்குள் ஒருவித சல்லாபத்திற்கு வந்துவிடுவோம். ஒருவரை ஒருவர் புகழ்வோம். அந்த மாலைப் பொழுதை ஒருவர் மற்றவருடன் சேர்த்துக் கழித்தால்தான் சுவர்க்கம் என்போம்.



நீட்டு சந்திரா பீகார் மாநிலத்தைச் சேர்ந்தவர். இந்திப் படங்களில் நடித்து வரும் இவர் ஒரு கராத்தே வீரர். கூடைப் பந்தும் ஆடுவார். கதக்களியும் ஆடத் தெரியும். ஹார்மோனியம், புளூட், தம்பூரா ஆகியவைகளை வாசிப்பார். தமிழ்ப் படத்தில் நடிக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ள இவர், இப்போது தமிழ் கற்றுக் கொள்கிறார்.

- க.ரவீந்திரன்

அதே ஹோட்டலிலோ அல்லது வேறு ஹோட்டலிலோ அறை எடுப்போம்.

எனக்கு வேண்டியது ஐநூறு ரூபாய்க்கு எதையாவது பொய் சொல்லுவேன். அவன் தருவான். அவனுக்குச் சீக்கிரமாக ஒரு இன்பத்தைக் கொடுப்பேன். அவன் செலவிலேயே சாப்பிட்டுவிட்டு வீடு திரும்பப் பார்ப்பேன்.

இந்த என் சுயவேட்டைகள் எல்லா நாட்களிலும் கிடையாது.

பொதுவாக மாலைக்குள் எனக்கு எங்க க்ரூப் தலைவி ஸ்டெல்லாவிடமிருந்து அழைப்பு வந்துவிடும். இன்னின்ன ஹோட்டலுக்கு, இன்னின்ன அறைக்குப்போக வேண்டும் என்று, போய் விடுவேன்.

ஏற்கனவே என் மன விருப்பங்களை இந்த டயரியில் கொட்டியிருக்கிறேன்.

எனக்கு இப்போதெல்லாம் இல்லற வாழ்வு மீது ஆசை வந்துவிட்டது.

யாராவது ஒரு மனிதருடன் சேர்ந்து அவருடன் வாழ்நாள் பூராவுமே வாழ்ந்துவிட விரும்புகிறேன். என்றும் இரவுப் பூவாக இருந்து என்ன பிரயோசனம்? உண்மையான அன்பை பாசத்தை, தேசத்தை மனம் பெற முடியாமல் தவிக்கிறது. என் வாழ்க்கையின் அடிப்படையை சிறிது சிறிதாக மாற்றிவிட வேண்டும் என்று ஆசை. அதற்காகத்தான் என் தொழில் வர்க்க நண்பர்களை விட்டுவிட்டு நல்ல வாழ்க்கைகளில்

உள்ள கீதா போன்றவர்களிடம் என் சிநேகங்களை வளர்த்துக் கொள்கிறேன்.

வினோத் இங்கே நிறுத்தினான். அந்தப் பருமனான நோட் புக்கை ஒருமுறை முறைத்துப் பார்த்தான்.

பக்கத்தில் உதயா மெல்லிய முறுவல் செய்தாள்.

"ஏது பக்கம் பக்கமாக எழுதுகிறாளே! என்றான்.

"பாவம்! அப்படி ஆதங்கம்!" என்றாள் உதயா.

"டயரி வாங்கிக் கட்டுப்படி ஆகாது. அதனாலேதான் நோட் புக்வாங்கி எழுதுகிறாள்" என்றான் வினோத்.

உதயா சத்தமில்லாமல் சிரித்தாள். அந்தத் தங்கைப் பெண் காப்பி கொணர்ந்தாள்.

அதை வாங்கும்போது மீண்டும் அவளை ஒருமுறை பார்த்தான். கண்கள் சுழலிட்டன. முகத்தின் இளம் பசுமை மென்மினு மினுவில் தெரிந்தது.

பார்வையை இழுத்துக் கொண்டு காப்பியைப் பருகினான்.

"ஆமாம்! இங்கே டயரி நிற்கிறதே!" என்றான்.

"நிற்கலை! கீழே பாருங்க! பக்கம் 128லே தொடருது.

அவன் பார்த்தான். பக்கத்தைப் புரட்டினான். மீண்டும் சஞ்சலா தொடர்ந்தாள்.

இன்று அப்படி ஒரு சந்திப்பு நிகழுமா என்று நினைக்கவில்லை. நான் கீதாவை சந்திக்கப் போனேன். இங்கே லிப்ட் கிடையாது! மாடிப்படிகள் தளத்தின் வராந்தாவையும் பார்க்கலாம். பானுமதி என்னும் பணக்காரி இரண்டாவது தளத்தில் இருந்தாள் என்று தெரியும். அந்தத் தளமும் வித்தியாசமாக இருக்கும். அருமையான செம்புத் தொட்டிகளில் குரோட்டன்ஸ். பானுமதியை நான் நேரில் பார்த்ததில்லை. கேள்விப்பட்டிருக்கிறேன். சீதா அவளைப் பற்றி சொல்லியிருக்கிறாள். அவளிடம் இருக்கும் நகைக்குக் கணக்குக் கிடையாதாம். முக்கியமாக ஒரு நவரத்தின மாலை வைத்திருக்கிறாளாம். விலைமதிப்பில்லாததாம்.

அன்று கீதா வீட்டுக்குப் போன போது வழக்கம் போல் இரண்டாம் தளத்து வராந்தாவைப் பார்த்தேன். நான் மாடி ஏறும் வழியிலிருந்து பத்தடியில் பானுமதி வீட்டு வாயில்! அங்கே ஒரு மனிதனைப் பார்த்தேன். அவர் அப்போதுதான் அந்த வீட்டுக் கதவைச் சாத்திவிட்டு வெளியில் வந்திருக்கிறான். என்னைப் பார்த்ததும் திடுக்கிட்டான். நான் அவனை நோக்கிப் போவது போல் தோன்ற தனது மெல்லிய குளிர் கண்ணாடி வழியாக என்னை முறைப்பது போல் பார்த்தான். அவன் என்னைக்

கண்டு பீதி அடைவது போலவும் தெரிந்தது.

நான் வராந்தா வளைவில் நடப்பது அவனை நோக்கி வருவது போல இருக்கவே, என்னைக் கண்டு பயந்திருக்கிறான். ஆனால் அடுத்த வினாடிகளில் நான் வளைந்து அடுத்த படிக்கட்டுக்குப் போவதைப் பார்த்து அவனுக்கு நிம்மதி வர என்னைப் பார்த்து தன் பயத்தை மறைத்துக் காட்ட வேண்டும் என்கிற எண்ணத்தில், ஒரு அசட்டுப் புன்னகை உண்டாக்கினான்.

அவனது இரண்டு உணர்ச்சிகளையும் நான் பார்த்துவிட்டேன். என்னைப் பார்த்து திடுக்கிட்டது மட்டும் நினைவில் விழுந்தது. அவனுக்குத் தலைமுடி அதிகமில்லை. நாற்பது வயது இருக்கும். நடுத்தர உடல் வாகு, முகம் மெலிந்து இருக்கும்.

அவன் பயப்பட்டதையும், புன்னகை காட்டியதையும் பொருட்படுத்தாமல் நான் மேலே போய் விட்டேன்.

மேலே போனபோது அன்றைக்குப் பார்த்து கீதா இல்லை. உடனே இறங்கினேன்.

எனக்கு ஒரு ஆவல் இருந்தது. இந்த மனிதன் பயந்தானே அவன் போனதைக் கவனிக்க வேண்டும் என்று கீழே இறங்கி இருபுறமும் பார்த்தேன். ஆளைக் காணவில்லை. அதற்குள் மாயமாக மறைந்துவிட்டானே என்று நினைத்தேன்.

இடதுபுறம் திரும்பிப் போனேன். சற்று தூரம் போனதும் அடுத்த தெருவில் திரும்பினேன்.

அங்கே நான் கண்ட காட்சி சிலிர்க்க வைத்தது.

ஒரு ஸ்கூட்டரில் அவன்அவசரமாக ஏறி புறப்பட்டிருந்த சமயம், என்னை அவன் பார்க்க, அவனை நான் பார்த்தேன். அவன் முகத்தில் வந்த கோபம் என்னை ஆச்சரியப்பட வைத்தது. ஏன் கோபம்!


ஆரம்பமே வேகம்! விருட்டென்று பறந்து போய் விட்டான். ஸ்கூட்டரின் நம்பரைக் கவனிக்கவில்லை.

நான் யோசித்துக் கொண்டே போனேன். ஸ்கூட்டரை இவ்வளவு தூரத்தில் இன்னொரு தெருவில் நிறுத்தி வைத்திருக்கிறான்.

அதை நான் எதேச்சையாகக் கண்டுபிடித்துவிட்டேன். அது தான் கோபம்!

இந்தச் சம்பவங்கள் எல்லாம் சாதாரணமாக எடுத்துக் கொள்வேன். அன்றும் அப்படித்தான் எடுத்துக் கொண்டேன்.

ஆனால் அடுத்த நாள் பேப்பர்களில் வந்த செய்தி என்னைத் திடுக்கிட வைத்தது.



பிரபல பாடகி பிரிட்டனி ஸ்பியர்ஸ் அமெரிக்க இசை நாடக GLEE தொடரில் பாடப் போகிறார். இந்த நிகழ்ச்சி மூலம் பாடகியிடமிருந்து சிறப்பான பாடல்களை ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

- க.ரவீந்திரன்

அந்த லியோ அபார்ட் மெண்டில் பானுமதி கொலையாகி இருந்தாள். அதுவும் அந்த மதிய வேளையில்!

முதலில் இந்தச் செய்தியை நான் சாதாரணமாக எடுத்துக் கொண்டேன். எதுவும் தோன்றவில்லை. ஆனால் திடீரென்று அந்த யோசனை வந்ததும் துள்ளினேன். பேப்பரை எடுத்து மீண்டும் படித்தேன். விவரங்களைத் திரும்பிப் படித்தேன். நேரங்களைப் பார்த்தேன். நிச்சயம் நான் பார்த்த அந்த ஆசாமிக்கும் அந்தக் கொலைக்கும் சம்பந்தம் உண்டு என்று நினைத்தேன்.

விரைவில் பூட்டை எடுத்து கதவைப் பூட்டிக் கொண்டு புறப்பட்டேன். படிகளில் இறங்கினேன். எனக்குத் தெரிந்ததைப் போலீஸில் சொல்லிவிட வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் அப்படிச் செய்தால் எனக்கே ஆபத்து வரும் என்று தோன்றியது.

தவிர கோர்ட் கேஸ் என்று எல்லாம் என்னைச் சூழ்ந்துகொள்ளும்.

என்னை எப்படியும் யாராவது கண்ணி வைத்துக் கொல்லப் பார்ப்பார்கள். பேசாமல் வீட்டுக்குத் திரும்பினேன்.

வினோத் அந்த டயரிக் குறிப்பை படித்து முடித்தான்.

ஏதோ எழுத்தைப் படித்தது போல் இல்லை ஒரு மனத்தைப் படித்தது போல் இருந்தது. அதன் கனம் அவனுக்கு நன்றாக தெரிந்தது. அவனுக்கே அந்த அனுபவங்கள் நிகழ்ந்துவிட்டன போல் தோன்றியது.

உதயா அவனைப் பார்த்திருந்தாள்.

“மிஸ் உதயா! சஞ்சலாவிடம் ஒரு பெரிய ரகசியம் தங்கி இருந்திருக்கே! லட்ச ரூபாய் ரகசியம்!”

“ஆமாம்! அதை நான் ரெண்டு

நாள் முன்னாடிதான் கண்டுபிடிச்சேன். இது மட்டும் எனக்கு முன்னாடியே தெரிஞ்சிருந்தால் அவளைக் கையோட இழுத்து போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போயிருப்பேன்.

விேனாதின் முகம் கல் போல கனத்தது. பார்வை மரத்தது. அந்த டயரியின் குறிப்பிட்ட குறிப்பின் ஆழம் சிறிது சிறிதாகத்தான் அவனுக்குப் புரிய வந்து கொண்டிருந்தது.

"உதயா! இதற்கு அப்புறம் எந்த தேதி?"

"ஏப்ரல் 4..?"

திருப்பினான். சஞ்சலா தொடர்ந்தாள்.

கீதாவைச் சந்திக்கலாம் என்று எப்போதாவது நினைப்பேன். ஆனால் அந்தச் சம்பவம் நடந்ததிலிருந்து விட்டுவிட்டேன்.

பானுமதியைக் கொலை செய்த குற்றவாளி அவன்தான் என்பது நிச்சயம். அவனுக்கு எதிரி ஆகக்கூடிய ஒரே நபர் நான்தான்!

நான் ஒருத்திதானே அவனைப் பார்த்தது. நான் ஒருத்திதான் சாட்சி! எனவே என்னை அவன் தேடிக் கொண்டிருப்பான். நிச்சயம் லியோ அபார்ட்மெண்ட் மாடிக்கு வருவேன் என்பதை அவன் உணர்ந்திருப்பான்! காத்திருப்பான்.

இந்தக் காரணங்களால், நான் கீதா வீட்டுக்குப் போவதை நிறுத்திவிட்டேன். அது மட்டுமல்ல! தெருவில் நான் நாலு பேர் முன்னால் என் முழுத் தோற்றத்தையும் காண்பிக்க பயமாக இருக்கிறது.

குற்றவாளி என்னை எப்போதாவது கண்டுபிடித்து விடுவான் என்ற பயம் அடிக்கடி தோன்ற ஆரம்பித்து விட்டது.

படித்ததும் விேனாத் நிமிர்ந்தான், – ஓகோ! இவளுக்கு பயம் வர ஆரம்பிச்சுட்டது.

"ஆமாம்."

"எங்கேயோ அடியில் சுரீர் என்ற உணர்ச்சி சுண்டியது, சஞ்சலாவின் கொலைக் காரணத்தை ரொம்ப சுலபமாக கண்டுபிடித்துவிட்டான்.

விேனாத்தின் நினைவுகள் சூடாகப் பறந்தன.

அந்த டயரி கிடைத்ததன் அதிர்ஷ்ட வசத்தை நினைத்தான். ஒரு பழைய பெரிய கேஸ் இதன் மூலம் துப்புத் துலக்கப்படும்.

நிச்சயம் சாத்தியக் கூறுகள் இருந்தன.

"உதயா!" என்றான். "இன்னும் ஏதாவது உண்டா?"

"இவ்வளவுதான்"

“நல்லது இந்த டயரி உங்ககிட்டே கிடைச்சு, அதை நீங்க என்கிட்டே சொன்னது நல்லதாப் போச்சு. நான் இந்த டயரி முழுசையும் படிக்கணும். எடுத்திட்டுப் போலாமா?”

“ஓ, தாராளமா! அதுக்குத்தானே உங்ககிட்டே கொடுத்தேன்.

“இப்போ எனக்கு உதவி புரியுங்கோ, மிஸ் உதயா! சஞ்சலா எனக்கு போன் பண்ணி உடனே உதவி கேட்டுத் துடிச்சா! ஆனால் நான் போறதுக்கு முன்னாடி காரியம் ஆயிடுத்து. நீங்க கடைசியா சஞ்சலாவை எப்போ பார்த்தீங்க?”

“வெள்ளிக்கிழமை கொலை நடந்திருக்கு இல்லே! நான் வியாழக்கிழமை அவளை சந்திச்சேன்!”

“எங்கே?”

“ஹோட்டல் விஸ்வாலேதான்!”

“ஓகோ அங்கே வந்தாளா?”

“ஆமாம்!”

“நான் கேட்கிறதைத் தப்பிதமாக நினைக்கக்கூடாது! தனியே வந்தாளா?

“இல்லை ஸார். ஒரு கஸ்டமர் இருந்தார்.

“அவர் யாருன்னு சொல்ல முடியுமா?”

“பேரு தெரியல்லை! ஆனா என்னாலே ஆளைக் கண்டுபிடிக்க முடியும்! அடிக்கடி தென்படுகிற ஆள்தான்!”

“சரி! அவரைப் பார்த்தா எனக்கு போன் செய்யுங்க. அப்புறம் நீங்க சஞ்சலாவோடு பேசினீங்களா?”

“ஒரு அஞ்சு நிமிஷம் தனியாப் பேசி இருப்போம். அப்போ அந்த கஸ்டமர் ரூம்புக் பண்ணப் போயிருந்தார்.

“என்ன பேசினீங்க.”

“என்ன பேசறது. எங்க தொழில் சம்பந்தமா... அப்புறம் எங்க தொழில்லே இருக்கிற மற்ற பெண்ணுங்களைப் பற்றி...”

“இந்தப் பேச்சு எப்போ நடந்திச்சு!”

“வியாழக்கிழமை ராத்திரி ஏழு மணி இருக்கும்.”

“ரைட்! அப்போ சஞ்சலா எப்படி இருந்தாங்க?”

“நார்மலா இருந்தாங்க.”

“ஏதாவது கவலை, கலக்கம் எதுவும் இல்லையே”

"இல்லை."

"தனது உயிருக்கு ஆபத்து வந்திருக்குன்னு ஏதாவது சொன்னாளா?"

"இல்லவே இல்லை! எப்போதும் போல மகிழ்ச்சியா பேசினா!"

"சரி உதயா! சஞ்சலாவுக்குக் கவலை ஏதாவது இருக்குன்னு வச்சுக்குங்க! அப்போ அப்படி மகிழ்ச்சியா பேசமாட்டாங்க இல்லே!"

"நிச்சயமா மாட்டாங்க. ஒரு சின்னக் கவலை வந்துட்டாலும் போதும். மனசை அரிச்சுடும். அதைப் பத்திதான் சொல்லிக்கிட்டே இருப்பா.

வினோத் தலையை மட்டும் அசைத்தான். "அப்போ ஒரு விஷயம் எனக்குத் தெளிவாகப் போச்சு."

"என்ன விஷயம்?"

"அதாவது சஞ்சலா அந்தக் கொலைகாரனை முந்தின நாள் வரை பார்க்கவில்லை. பார்த்திருந்தால் நிச்சயம் உங்களிடம் அது பற்றி பேசியிருப்பா இல்லை.

"நிச்சயம்! அவளாலே பேசாம இருக்க முடியாது.

"ரொம்ப நன்றி உதயா! இப்போ ஒரு விஷயம் எனக்குத் தீர்மானமாச்சு. அதாவது கொலை ஆகிறதுக்கு முந்திய நாள் வரையிலே. கொலைகாரனை அவள் பார்க்கலை. பார்த்திருந்தால் கலவரப்பட்டு உங்ககிட்டே அந்த விஷயத்தைப் பேசியிருப்பா."

"ரைட் ஸார்! உங்க வாதம் ரொம்பப் பொருத்தம்."

"அப்போ கடைசி நாளிலேதான் சஞ்சலா அந்தக் கொலைகாரனைப் பார்த்திருக்கா. இதுக்கு மேலே நான் விசாரணை பண்ணிக்கிறேன். ரொம்ப நன்றி உதயா! உங்க உதவி வேணுமின்னா உங்களுக்குப் போன் செய்யறேன். அவசியம் ஒத்தாசை செய்யணும்."

"நிச்சயமா"

## 3

**போ**லீஸிடமிருந்து அனுமதி வாங்கி சஞ்சலாவின் பிளாட்டை வினோத் பார்த்தான்.

உள்ளே நிறையப் பொருட்களை போலீஸ் கலைத்துப் போட்டிருந்தார்கள்.

பார்த்தால் பரிதாபமாக இருந்தது. தடயம் தேடுகிறார்களாம். இப்படியா கசாமுசா ஆக்குவது?

ஒன்று தெரிந்தது.

சஞ்சலாவுக்கு உறவினர் யாரும் இல்லை. அவள் சடலத்தை யாரும் பெற்றுக் கொள்ளவில்லை. யாராவது தூரத்து உறவினர் இருந்திருக்கலாம். ஆனால் இப்போது முன்னே வரத் தயங்கினார்கள். வீட்டுக்காரர்கள் அந்த ப்ளாட்டை ஒழித்துக் கொடுக்குமாறு வற்புறுத்திக் கொண்டிருந்தார்கள். போலீஸார் இன்னும் இசையவில்லை.

வீட்டு உள்ளே எல்லா இடங்களையும் தனது ஆராய்ச்சிக் கண்களால் தேடினான் வினோத். மேஜை அலமாரி எல்லாம் பார்த்தான். எந்த விஷயமும் கிடைக்கவில்லை.

இங்கே பிளாட்கள் இருந்த விதம் வினோத்திற்கு அதிருப்தியை அளித்தது. ஒவ்வொருவருக்கும் தனிமை வேண்டும் என்பதற்காக ஒவ்வொன்றையும் மற்றொருவர் பார்க்காத வண்ணம் கட்டியிருந்தார்கள். அதனால் ஒரு ப்ளாட்டில் யார் வருகிறார்கள், போகிறார்கள் என்பது மற்றவர்களுக்குத் தெரியாது.

பக்கத்து பிளாட் சற்று ஒதுங்கித்தான் இருந்தது. அதற்கு அடுத்த பிளாட் அதன் மறைவில் இருந்தது. ஒரே தளத்தில் இருக்கும் இந்த ப்ளாட்கள் ஒன்றுக்கொன்று சந்திப்பு இல்லாமலேயே இருந்தது.

வினோத் தனது அயர்ச்சி தரும் விசாரணையை ஆரம்பித்தான். 12–வது மாடியில் தொடங்கி இரண்டு தளங்கள் முடிவதற்குப் பாதி நாள் ஆகிவிட்டது. நிறைய இந்தி குடும்பங்கள் இருந்தன. சிலருக்கு சஞ்சலாவைப் பற்றி அதிகம் தெரியாது. ஆனால் நல்லவள் என்று தெரியும். ஏதாவது பொதுப் பண்டிகை என்றால் அவளே முன்னால் நின்று வேலை செய்வாள்.

எல்லாக் குடும்பங்களையும் விசாரிக்க மூன்று நாள் ஆகியது.

குடும்பங்கள் அதிகம் நெருங்கிப் பழகவில்லை. சில குடும்பங்கள்தான் ஒன்றுக்கொன்று பழகின.

சிலருக்கு ஒரு நபர் அந்த அபார்ட்மெண்ட்ஸில் வசிக்கிறார் என்று மட்டும் தெரியும். அதற்கு மேல் தெரியாது.

சஞ்சலாவை மத்தியானம் பார்த்ததாக ஒருவர் சொன்னார். நாலு மணிக்குப் பார்த்ததாக இன்னொருவர் சொன்னார். சஞ்சலாவிடம் அப்போது சுபாவமாகத்தான் இருந்தாள். புன்னகைகூடப் புரிந்தாள்.

பண்டிகை நடந்த இந்திக்காரர் வீட்டில் அவளைப் பற்றி நிறையச் சொன்னார்கள்.

சாயங்காலம் ஐந்து மணியிலிருந்து பண்டிகை தொடங்கி விட்டது. சஞ்சலாவை இந்தி வீட்டுப் பெண் ஜியோத்ஸ்னாவுக்கு நன்றாகத் தெரியும்.

லிஃப்டில் சந்தித்த பழக்கம் கொஞ்சம் வலுவாகி இருந்தது.

அந்தப் பெண்ணின் அழைப்புப் பேரில் சஞ்சலா பண்டிகையில் கலந்து கொண்டிருந்தாள். அது ஒருவித சமயச் சடங்கு! அபார்ட்மெண்ட்ஸ் மத்தியில் ஒரு பொது ஹால் இருந்தது. பண்டிகை, அங்கே கொண்டாடப்பட்டது.

மாலை ஐந்து மணிக்கு அந்த விழா ஆரம்பித்தது. தொடங்கிய அரைமணி நேரத்தில் அழைக்கப்பட்டவர்கள் எல்லோரும் வந்துவிட்டார்கள். மொத்தம் நூற்று எண்பது பேர் அழைக்கப்பட்டிருந்தார்கள். சஞ்சலாவைப் போய் ஒரு சிறுமி அழைத்து வந்தாள். சஞ்சலா மகிழ்ச்சியோடு கலந்து கொண்டாள். கலகல என்று பேசினாள். பலகாரம் சாப்பிட்டாள். ஆனால் நிகழ்ச்சியின் பாதியில் திடீரென்று அவளுக்கு உடம்பு சரியில்லை என்றாள். தலை வலித்தாற் போல இருந்தது. "நான் கொஞ்சம் ப்ளாட்டுக்குப் போறேன். தலையிலே ஏதாவது போட்டுக்கணும்!" என்றாள்.

"போட்டுக்கிட்டு ஒரு அஞ்சு நிமிஷம் ரெஸ்ட் எடுத்துக்க. அப்புறம் வந்துடு. நாம்ப கோவிலுக்குப் போறோம் என்றாள் ஜியோத்ஸ்னா.

விடைபெற்றுப் போய் விட்டாள்.

அடுத்த பத்தாவது நிமிடம் பண்டிகை கோஷ்டி வெளியில் புறப்பட்டது.

ஒரு சிறுமியை மாடிக்கு அனுப்பித்தார்கள். அவள் சஞ்சலா வீட்டு மணியை அழுத்தியிருக்கிறாள். ஆனால் சஞ்சலா வரவில்லை. சிறுமி திரும்பி விட்டாள். அதன் பிறகு பண்டிகை கோஷ்டி கோவிலுக்குப் போக ஆரம்பித்தது.

இரண்டாம் தரமும் சிறுமி மேலே அனுப்பப்பட்டாள். சிறுமி மணி அடித்ததும், சஞ்சலா உள்ளே இருந்தவாறே "யார்?" என்று கேட்டிருக்கிறாள். சிறுமி தன் பெயரை அறிவித்ததும், "நீங்க போங்க, நான் வந்துடறேன். என்று சஞ்சலா சொல்லியிருக்கிறாள்." ஆனால் சஞ்சலா வரவில்லை.

கோஷ்டி கோவிலிலிருந்து ஏழு மணி சுமாருக்குத் திரும்பியிருக்கிறது.

அந்தக் கோஷ்டியில் தான் வினோத் மாட்டிக் கொண்டான்.

கோஷ்டி திரும்பி வந்தபிறகு சஞ்சலாவை அழைக்க யாரும் போகவில்லை.

இவ்வளவு விஷயத்தையும் ஜியோத்ஸ்னாவிடமிருந்து வினோத் தெரிந்து கொண்டான்.

ஜியோத்ஸ்னாவிடம் சஞ்சலா தனது தொடர்ச்சி 34-ம் பக்கம்

31-ம் பக்கத் தொடர்ச்சி உத்தியோகத்தைப் பற்றி என்ன சொன்னாள்.

ஒரு கம்பெனியில் சேல்ஸ் மேனேஜராக வேலை பார்க்கறேன் அடிக்கடி வெளியே சுற்ற வேண்டும். இரவு திரும்ப வருவது கூட நேரமாகும்.

ஜியோத்ஸ்னாவுக்கு சஞ்சலா பற்றி என்ன அபிப்பிராயம்?

நல்ல பெண், கலகலப்பு! யார் அறிமுகமானாலும் சரளமாக பேசுவாள். மௌனமாக இருக்க மாட்டாள். அவளோடு இருந்தாலே பொழுது போக்காகத் தெரியும்.

ஜியோத்ஸ்னாவிடம் பேசிவிட்டு வினோத் திரும்பிய போது, அவன் நினைவுகள் வேகமாக இயங்கின.

அந்தப் பெண்ணிடமிருந்து நிறைய விஷயம் சேகரித்து விட்டான்.

ஜியோத்ஸ்னா நன்றாகவே பேசினாள். அந்த வட இந்திய விழியும் நிறமும் அவனைப் பெரிதும் கவர்ந்தன. குரலில் சங்கீதமாக தமிழ் வந்தது. இடுப்பில் ஸாரியின் இறுக்கமும், கன்னிப்போன இடையும் கண்ணில் அடிக்கடி விழுந்தது. இரண்டு கடின மேற்புறங்கள் சோளியைக் குத்திச் சிரிப்பதாகக் கூடத் தோன்றியது.

அவளிடம் பேசிவிட்டு வெளியே வந்தவன் தனது அறை வரும்வரை ஒரு மென்மையான ஆனந்தத்தில் மிதந்தான். அவளது சில குறிப்பிட்ட வார்த்தைகளும், சில தொனி அழுத்தமும் மனத்தில் வசீகரமாய்ப் பதிவாகியிருந்தன.

அறைக்கு வந்ததும் சாப்பாடு ஓடவில்லை. டிபன் காரியரில் வந்து காத்திருந்தது. தனது குறிப்புகளை எல்லாம் சேகரித்து வைத்து யோசிக்க ஆரம்பித்தான்.

ஜியோத்ஸ்னாவிடமிருந்து வந்த விவரங்கள் தான் அதிகமான கவனம் இழுத்தது.

ஒரு விஷயம் முக்கியமாகத் தெரிந்தது. ஐந்து மணிக்கு சஞ்சலா உற்சாகமாக இருந்திருக்கிறாள். பிறகு அந்த பண்டிகை கோஷ்டியில் கலந்து கொள்ளும் வரை உற்சாகமாக இருந்திருக்கிறாள். கலந்து கொண்ட பிறகு பாதி வேளையில் தலைவலி வந்திருக்கிறது.

அதுவரை அவளிடம் உற்சாகம்! கலகலப்பு! பார்த்த பேர் எல்லோரும் சொன்னார்கள். ஆனால் பாதியில் திடீரென்று தலைவலி!

ஒரு ஞானோதயம் பளிச்சிட்டது.

கூட்டத்தில் அவள் யாரையோ பார்த்திருக்க வேண்டும். அது அந்தக் கொலையாளியாக இருக்க வேண்டும்.

அதுதான் சரியான காரணமாகப் பொருந்துகிறது 'என்னைக் கொல்ல ஒருத்தன் வந்திருக்கான். பின்னாலே போன் பேசும் போது அதனால் தான் அப்படிச் சொல்ல முடிந்தது.

சஞ்சலா ப்ளாட்டுக்குள் இருப்பவள்! வெளியில் வந்து பார்த்தால் தவிர அவளைக் கொல்ல ஒருவன் வந்திருக்கிறான் என்பது தெரியாது. மாலை ஐந்தரை வரை உற்சாகமாக இருந்திருக்கிறாள். ஐந்தரை மணிக்கு மேல் அவள் யாரையோ பார்த்துவிட்டு கலங்கி இருக்கிறாள். தலைவலி என்று மற்றவர்களிடம் சொல்லியிருக்கிறாள்.

சரி! பண்டிகைக் கூட்டத்தில் உட்கார்ந்திருந்த போதே அவளுக்கு தலைவலி வந்திருக்கிறது. அதுவும் பாதி வேளையில்! அப்படியானால் கூட்டத்தில் உட்கார்ந்த பிறகுதான் அவள் அந்த ஆசாமியைப் பார்த்திருக்கிறாள். அவளுக்கு பயம் வந்துவிட்டது. எழுந்துபோய்விட்டாள். அநேகமாக அந்த ஆசாமிக்குத் தெரியாமல் எழுந்து போயிருக்க நினைத்திருப்பாள். ஆனால் ஆசாமி அவளைக் கவனித்திருக்க வேண்டும்.

ஆக, ஒரு தடயம் உருவாகி விட்டது. பானுமதியையும் சஞ்சலாவையும் கொலை செய்த ஆசாமி அந்தக் கூட்டத்திற்கு வந்திருக்க வேண்டும்.

அந்த ஆசாமி சஞ்சலாவை என்றைக்காவது தேடிக் கொல்ல வேண்டும் என்று நினைத்திருப்பான். ஏனெனில் அவள் இருக்கும் வரை அவனுக்கு ஆபத்து! அவனை எப்போதாவது காட்டிக் கொடுத்து விடுவாள். அதனால் நிச்சயம் அவளைக் கொல்ல வேண்டும்.

இங்கே இந்தப் பண்டிகை வீட்டில் அதற்குச் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. அவளைத் தொடர்ந்து போய்க் கொன்றிருப்பான்.

ரைட்! இப்போது அந்த ஆளைக் கண்டுபிடிப்பது எப்படி?

வாசல் மணி அடித்தது. திறந்தான்.

உள்ளே வருபவளைப் பார்த்துப் பல கணங்கள் திக்பிரமையில் இருந்தான்.

முறுவல் மெலிதாகச் சிந்த, உதயா மென்மையான நீல ஸாரியில் நின்றாள்.

"வாங்க! வாங்க!" என்று உபசரித்தான் வினோத்.

மிருதுவாக இழையும் பாரின் மணமுடன் அந்த கறுப்பு அழகி உள்ளே வந்தாள். "உங்களைத் தொந்திரவு படுத்தறேன். எனக்கு இந்தக் கேஸ் மேலே ரொம்ப ஆர்வம் வந்திருச்சு! அதனால்தான் என்ன ஆச்சுனு கேட்டுகிட்டுப் போலாமின்னு வந்துட்டேன்!" என்றாள்.

ஒரு அரிய யௌவனம் அவளிடம்.

அத்தனை உறுப்புகளும் வனப்புகள். மெல்லிதாக ஒரு பூச்சு பருமன் அதிகம். ஆனால் அதுவே அவளுக்கு அசாத்திய செக்ஸ் கொடுத்திருந்தது. மெத்தை போன்ற உடல் வார்ப்பு என்று எண்ண வைத்தது.

அவளது சருமம்தான் அவனை மிகவும் இழுத்தது. பச்சை பசேல் என்று பறித்து எடுத்த பிஞ்சு போல அதில் தளதள என்று ஒரு இளமை. பார்க்கும்போதே அதனோடு ஒட்டிக்கொள்ளவேண்டும் என்று நினைக்க வைக்கிற கவர்வு.

இடை சற்றே ஒரு வரி அதிகம். கீழே இறங்கும் அழகுகளோ கலந்துவிட்ட நேர்த்தி. கதுப்பு கதுப்புகளாக இடுப்புச் சந்துகள்! அவற்றின் பூரிப்பான ஒரு செழிப்பு.

வினோத் இரண்டொரு நிமிடம் பேசவில்லை. அபூர்வமாகச் சில பெண்களின் உருவங்கள் அவனை வாயடைக்க வைத்துவிடும். இது ஒன்று.

"உதயா! நீங்க எனக்குச் செய்த உதவியை மறக்கவே முடியாது நான் ஆளை அநேகமாக கண்டுபிடிச்சாச்சு."

"கண்டுபிடிச்சாச்சா? கை கொடுங்க."

உற்சாக மேலீட்டில் அவன் கையை எடுத்துக் குலுக்கினாள். சில்லென்று ஸ்பரிசம் அவனது இதயம் வரை சென்றது "யார் அது சொல்லுங்க" என்றாள்.

"கண்டுபிடிச்சாச்சுன்னா எங்க பாஷையிலே ஆள் பக்கம் நெருங்கியாச்சுன்னு அர்த்தம். இனிமே சீக்கிரம் பிடிச்சுட வேண்டியதுதான்.



45 வயதான எலிசபெத் ஹர்லி 22 வயதான பாடகர் சாக் எபரோனைக் காதலிக்கிறார். தன்னுடைய எட்டு வயது மகனோடு இவனது இசையை ரசித்தபோது காதல் ஏற்பட்டதாக நடிகை சொல்கிறார்.

- க.ரவீந்திரன்

உதயா நிறைய முறுவலில் இருந்தாள். அவள் நீள உதடு முறுவலில் வளைவது போல் சதா காட்சி கொடுத்தது. கின்னஸ் ரிக்கார்ட் ஏற்படும்படி முத்தம் கொடுக்கலாம். அப்படி ஒரு ஈரப் பரப்பு அவளது உதட்டில். "எப்படிக் கண்டுபிடிச்சீங்க சொல்லுங்க!" என்றாள் குழையும் குரலில்.

வினோத்துக்கு அவளிடம் மறைவு வைத்துக் கொள்ள விருப்பமில்லை. அவள்தான் முக்கிய வழியையே காட்டிக் கொடுத்திருக்கிறாள். எனவே அவன் எடுத்துக் கொண்ட பிரயாசைகளையும், அதில் அவனுக்கு இதுவரை தெரிந்த விஷயங்களையும் விவரமாகக் கூறினான்.

அவள் கண்கள் ஆச்சரியத்தில் மின்னின. வினோத்தின் கண்டுபிடிப்புகள் அவளை அயர வைத்துவிட்டன.

"சபாஷ் வினோத்! இப்போ ஒரு கொலைக்குப் பதிலா ரெண்டு கொலையை ஒரே சமயத்திலே கண்டுபிடிக்கப் போறீங்க! இனிமே என்ன செய்யலாம்னு நினைக்கிறீங்க!"

"உதயா ஒரு விஷயம்! அந்த இந்திக்காரன் வீட்டுப் பண்டிகைக்கு வந்திருந்த நூற்று எண்பது விருந்தாளிகளிலே அவன் ஒருத்தனா இருப்பான். ஆக, நம்ப சந்தேகத்தை ஒரு தொகைக்குள்ளே அடக்கியாச்சு. இதுவே பெரிய காரியம். இப்போ இதுக்குள்ளே கண்டுபிடிச்சாகணும்.

"அதுக்கு என்ன செய்யப் போறீங்க? இவங்களை ஒவ்வொருத்தரையா பார்க்க முடியுமா?"

"பார்க்கத்தான் வேணும். அதைத்தான் யோசிச்சுக்கிட்டிருக்கேன். இதிலே உங்க உதவி வேணும் உதயா!"

"என்ன வேணும் சொல்லுங்க"

"இந்த மாதிரி நகை திருடி, கொலை பண்றவங்க எல்லாருமே பெண்ஷோக்கு இல்லாம் இருக்க மாட்டாங்க! அதனாலே நீங்க இவங்களை அடையாளம் கண்டுபிடிக்க முடியுமா?"

"ஓகோ! பெண் ஷோக்குன்னா எங்களைத் தேடி வந்திருப்பாங்கன்னு நினைக்கிறீங்களா?"

"அப்படி நான் நினைக்கிறதுக்கு மன்னிக்கணும் உதயா."

"பரவாயில்லை. நிச்சயம் நான் உதவி செய்யறேன்."

"அப்போ வேணுங்கிறபோது போன் நான் செய்யறேன்."

"சரி."

உதயா எழுந்தாள். அவளிடம் என்னவோ ஒரு தயக்கம் இருந்தது. "தனியாக இருக்கிறீங்களே சாப்பிடவில்லையா?" என்றாள்.



அசட்டுச் சிரிப்பாகச் சிரித்தான் அவன்.

"ஏதாவது சந்தர்ப்பம் வந்தா எங்க வீட்டிலே வந்து சாப்பிடணும் கூச்சப்படக்கூடாது!" என்றாள் அவள்.

"இல்லை!" என்றான் அவன்.

இரண்டடி வைத்துத் தயங்கி நின்றாள். "உதயா!" என்றான் அவன்.

"ஒருவேளை எங்க வீட்டிலே சாப்பிடமாட்டீங்களோ?" என்றாள் கரகரத்த குரலில்.

"இல்லை அப்படி எல்லாம் இல்லை!" அவசியம் சாப்பிடுவேன். என்றான் அவன்.

அவள் வாசல் வரை போனாள். தெருவைத் தாண்டி போன பிறகுதான் அவள் தன் கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

## 4

ஜியோத்ஸ்னாவைத் திரும்பிப் பார்த்தபோது மீண்டும் அவனது இன்ப நினைவுகள் சுரந்து கொண்டன.

"மிஸ்டர் வினோத்! அன்னிக்கு வந்து நீங்க விசாரணை செஞ்சுட்டுப் போனதிலேர்ந்து எனக்கு வருத்தமா இருக்கு! எங்களுக்குத் தெரிஞ்ச விருந்தாளி ஒருவன்தான் கொலையாளின்னு நினைக்கக் கஷ்டமாயிருக்கு. அதுவும் அவன் என் டியர் சிநேகிதி சஞ்சலாவை கொன்னுட்டான். சொல்லும்போது கூடக் கொஞ்சம் கஷ்டமா இருக்கு" என்றாள்.

"நீங்க கவலைப்பட வேண்டாம் ஜியோத்ஸ்னா! எல்லா வீடும் ஒன்று போல இருக்கா. எனக்கு நீங்க ஒரு உறுதி கொடுக்கணும். இந்த பேச்சை அப்படியே ரகசியமா வச்சிருக்கணும்."

"ஓ! அப்படியே வச்சுக்கறேன். எங்க அப்பாதான் பயப்படறாரு, அவர் ஒரு இருதய நோயாளி. போலீஸ் கீலிஸ் வந்தா கஷ்டமா இருக்குமேன்னு..."

"போலீஸ் வராதபடி நான் பார்த்துக்கறேன். நீங்க எங்களுக்கு உதவி செஞ்சாப் போதும்."

"நிச்சயம்."

"நீங்க நூற்று எண்பது விருந்தாளிகளைக் கூப்பிட்டதா சொல்றீங்க!"

"ஆமாம்."

"அத்தனை பேர் விலாசமும் இருக்குதா?"

"இருக்கு."

"கொண்டாங்க."

ஒருநோட்புக்கை எடுத்துவந்து நீட்டினாள். அதில் இந்திக்காரர்கள், தமிழ்க்காரர்கள் எல்லாம் விரவி இருந்தன. பாதி ஆட்கள் தமிழர் வந்திருந்தார்கள்.

ஒருமுறை பார்த்த பிறகு ஜியோத்ஸ்னா, இதிலே உங்களுக்கு யார் மேலேயாவது சந்தேகம் உண்டா?" என்றான்.

அவள் முறுவலித்தாள்.

"எப்படி ஸார் சொல்ல முடியும். எல்லோரும் எங்க குடும்பத்து தெரிஞ்சவங்க. நல்ல வர்களாகத்தான் இருக்கணும்."

"நீங்க நல்லவங்க ஜியோத்ஸ்னா. அதனால்தான் எல்லோரையும் நல்லவங்கன்னு சொல்றீங்க."

அவள் கண்கள் முறுவலித்தன. அப்போது அவள் வாத்சல்யமாக விடுத்த ஒரு பார்வை அவன் இதயத்துள் சென்று எதையோ தேடுவது போல இருந்தது.

அவனுக்கு நெஞ்சு பட படத்தது. உண்மையில் ஜியோத்ஸ்னா காதல் பார்வை எறிந்தால் அவனால் தாங்க முடியாது. ஏனெனில் அவள் கண்களில் அப்படி ஒரு காந்தக் கவர்ச்சி இருந்தது. சாதாரண பார்வையிலேயே யாரும் சொக்கி விடுவார்கள்.

"இல்லை மிஸ்டர் வினோத்.

## கவிதைகள்

### நிலவு

வான வாசலில்
புள்ளி வைத்தவள்
கோலமிடாமல்
ஓடிவிட்டாள்...!
'ஓ!'
ஆதவனுக்கு – இவள்
அத்தை மகளோ!

***

### அவளோடு...

அவளைச் சந்தித்த
அதே கோயில்...
அவளுடன் சாப்பிட்ட
அதே ஹோட்டல்...
அவளுடன் அமர்ந்திருந்த
அதே பூங்கா...
அவளுடன் சென்ற
அதே தியேட்டர்...
அவளுடன் நின்றிருந்த
அதே நிழற்குடை..
மனைவியோடு
இவற்றையெல்லாம்
பார்க்கும்போது
எத்தனைதான் முயற்சித்தாலும்
மீண்டு வரமுடியவில்லை
அவளின் நினைவுகளிலிருந்து!

***

### ஆண்கள்

பெண்களால்
விற்க...
வாங்க...
உள்ள
ஜடங்கள்!

- போளூர் சி.ரகுபதி

இதிலே நாங்க யோசிக்கத்தான் வேணும்."

"சரி அன்னிக்கு நீங்க கூப்பிட்டத்தைத் தவிர யாராவது வந்திருந்தாங்களா?"

"அப்படி யாரையும் நாங்க உள்ளே அனுமதிக்கலை. இங்கே ஒருத்தர் அபார்ட்மெண்டிலே அதை மாதிரி நடந்தபோது, சங்கிலி காணாமல் போயிட்டது."

"ரைட். நீங்க சொல்றது எனக்கு ரொம்ப உதவியாப் போச்சு. சரி உங்க பண்டிகை எப்போ முடிஞ்சது?"

"ராத்திரி ஒன்பது மணி."

"சரி, நீங்க வெளியில் ஊர்வலமாய் போய்ட்டு வந்தீங்களே அப்போ உங்ககூட எல்லோரும் வந்துட்டாங்களா, இல்லை. இங்கே சில பேர் தங்கியிருப்பார்களா?"

"அநேகமா எல்லாரும் வந்திருக்கணும். சில பேர் நடைக்குச் சோம்பல் பட்டு இங்கேயே தங்கியிருப்பாங்க."

"அன்னிக்கு இங்கே யார் தங்கி இருந்தாங்கன்னு சொல்ல முடியுமா?"

ஜியோத்ஸ்னா யோசித்தாள். பிறகு உள்ளே நோக்கி "நிஷா! நிஷா!" என்று கூப்பிட்டாள்.

ஒரு இளம் பெண் ஸல்வார் கமீஸில் ஓடி வந்தாள். அவளிடம் இந்தியில் கேட்டாள் ஜியோத்ஸ்னா.

"பல பேர் தங்கிட்டாங்க" என்றாள் அவள்.

"ஓ, நீயும் இங்கே தங்கினியா?" என்றான் வினோத்.

"ஆமாம். இங்கே காரியங்களைக் கவனிக்க வேண்டி வந்திச்சு."

"அப்போ யார் யாரைப் பார்த்தே சொல்லு."

அந்தப் பெண் யோசித்து யோசித்துச் சொன்னாள்.

"கார்த்திக் பார்த்தேன்.. ராமசாமி.. அப்புறம் கிருஷ்ணகுமார்... நடராஜ் சிவபாதம்... கிஷோர்... மாணிக்கம்."

அப்புறம் அவளுக்கு நினைவு வரவில்லை.

"அவள் எல்லாரும் உங்க வீட்டுக்குள்ளே உட்கார்ந்து பேசிக்கிட்டிருந்தாங்களா?"

"வீட்டுக்குள்ளே இல்லை. ரெண்டாவது தளத்திலே பொது ஹால் இருக்கே அங்கே."

"சரி இவங்க அங்கே உட்கார்ந்துகிட்டு இருந்தாங்களா?"

"சும்மா பேசிட்டிருந்தாங்க!"

"நீங்க என்ன செஞ்சீங்க?"

"நான் குறுக்கே நெடுக்கே போய்க்கிட்டே இருந்தேன்."

"இந்த ஏழு பேரும் அப்படியே இருந்தாங்களா! இல்லாட்டி யாராவது ரொம்ப நேரம் காணாமல் போய் இருந்தாங்களா?"

நிஷா யோசித்தாள். முகத்தைச் சுளித்துத் தலையைத் தட்டினாள்.

"ஸார்! அதை யோசிக்க முடியலை ஸார். அதிலே ரெண்டு பேர் மட்டும் எக்ஸ்ட்ரா கூல் ட்ரிங் குடிச்சாங்க."

"யார் அவங்க?"

"நடராஜ் ஒருத்தர். மாணிக்கம் ஒருத்தர்."

வினோத் தன் நெற்றியில் கை வைத்தான். யோசித்து விட்டு, "சரி இந்த ரெண்டு பேரையும் இங்கே அழைச்சுட்டு வர முடியுமா! ஏதாவது காரணம் காட்டி!"

ஜியோத்ஸ்னா திகைத்தாள். "ஏன் கொண்டு வர முடியாதா!" என்று அவளைக் கூர்ந்து பார்த்துக் கேட்டான் வினோத்.

"ரெண்டு பேரை மட்டும் கூப்பிட்டா நல்லா இருக்காது."

"அப்போ எல்லோரையும் கூப்பிட முடியுமா!"

அவள் யோசித்தாள். "ஸார்! ஏதாவது சின்ன ஃபங்க்ஷன் வச்சு இவங்களை மட்டும் கூப்பிட முடியும். ஆனா அது நல்லா இருக்காது ஸார்.

"ஏன் செஞ்சா என்ன?"

"மற்றவங்களை ஏன் கூப்பிடலைன்னு பேச்சு வரும்!"

வினோத்தும் யோசித்தான். "சரி! ஜியோத்ஸ்னா நான் வேறு ஏதாவது யோசிச்சுக்கிட்டு வரேன்! இந்த நூற்று எண்பது பேர் விலாசத்தை மட்டும் எடுத்திட்டுப் போறேன்!" என்று அதை எடுத்துக் கொண்டான்.

மறுநாள் தான் தனது சொந்த ஆபீஸ் போனான். லாரா குசலம் விசாரித்தாள். "போன இடங்களில் காரியங்கள் எப்படி?"

மத்தியானம் மேஜர் மாணிக் வந்தார். வினோத் அவரிடம் புது கேஸை வாய்ப்பாடு போல் ஒப்பித்தான்.

மாணிக் பிரயாசை இல்லாமல் காதோர நரையை மட்டும் திருகிக் கொண்டு இருந்தார்.

வினோத் நிறுத்தி ஐந்து முழு நிமிடங்கள் ஓடிவிட்டன! இன்னும் மாணிக் தமது முதல் நிலையை மாற்றவில்லை.

"ஸார்!" என்றான் விேனாத்.

"என்ன சொல்றே?" என்று முகத்தை திருப்பினார் மேஜர் மாணிக்.

அவன் கண் கெஞ்சிற்று.

உக்கிரமாக அவர் உறுமியவாறு, என்ன கேட்கிறே நீ? இது ஒரு...

நின்றான் வினோத். இதைப் போய் கேஸ் இல்லை என்கிறாரே. இருந்தாலும்... எக்கச்சக்கமானது... எப்போ சீறுவார் என்று சொல்ல முடியாது.

கை விரல்கள் மத்தள வாசிப்பில்... "போ எல்லோருக்கும் மொட்டை கடிதாசி எழுது. கேட்க மாட்டான் பிரச்னைக்கு வழி, சீ..." என்று முறைத்தார் அவர்.

அத்தனையையும் எடுத்து மடியில் கட்டிக் கொண்டான்.

வினோத் திரும்பவும் வெட்ட வெளியைப் பார்த்துப் பேந்தலாகப்.. பதித்தான். லாராவுக்கு சிரிப்பு வந்தது. வினோத் நிமிர்ந்து பாக்க, அவள் முகத்தை வேறு புறம் திருப்பினாள்.

லாரா ஆங்கிலோ இந்தியப் பெண். ஸாரி உடுத்தி, நல்ல சிகப்பு தோற்றத்தில் வந்திருந்தன சில பகுதிகள். விறைப்பில்.. அவை கண்ணுக்கும் தெரிந்தது. கலர் நல்ல பிரிட்டிஷ் சிவப்பு... ஹேர வொர்க்களை தடித்த... சின்னச் சின்ன... புன்சிரிப்பு அவளுடைய... விசேஷம்.

நேஷனல் டிடெக்டிவ் ஏஜென்சியில் அவள் ஸ்டெனோ.

"லாரா என்னைக் கேலி செய்யற மாதிரி இருக்கு" என்றான் வினோத்.

"நோ வினோத் நான் சிரிக்கவில்லை. மேஜர் மாணிக் ஏதாவது சொல்றதும் நீங்க அதுக்கு அர்த்தம் யோசிக்கிறதும் எனக்கு வேடிக்கையாத் தோணும். அதனாலேதான்.

"அவர் ஏடாகூடமாகச் சொல்லிட்டுப் போனா நான்ஏன் யோசிக்க மாட்டேன்?" ஆத்திரத்தோடு கேட்டான் வினோத்.

"ஏடாகூடாமா எங்கே சொன்னார்? நீங்க புரிஞ்சிக்கலை!" என்றாள் லாரா.

"நான் புரிஞ்சுக்கலையா. அவர் என்ன அப்படிச் சொல்லிட்டார்?"

வினோத் ஆத்திரத்தில் எழுந்துவிட்டான்.

"வினோத்! என்றாள் லாரா. இன்னும் புன்னகை மாறாமல்! "கொஞ் சம் பொறுமை பிளீஸ்! இப்படித்தான் ஒவ்வொரு முறையும் அவர் ஏதாவது சொல்றாரு. நீங்க ஆத்திரம் அடையாதீங்க. அவர் கரெக்டா சொல்லியிருக்கார்!

அழுத்தமாகப் பேசி முடித்தாள் அவள்.

வினோத் சற்று சுருண்டு நின்றான்.

"சொல்றார்! என்ன மகத்தான அர்த்தம் இருக்கு அவர் பேச்சிலே!" என்றான் அவன்.

"நான் சொல்வேன். நீங்க உட்காரணும்."

ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அவள் முன் உட்கார்ந்தான்.

"இந்தப் பாருங்க வினோத்! நீங்க திறமைசாலி. அறிவாளி! ஆனா மாணிக் முன்னாலே மட்டும் உங்களுக்கு ஒரு காம்ப்ளெக்ஸ் வந்துடுது. அவர் சொன்னது..."

"நீ ஒண்ணு! மொட்டைக் கடிதாசி எழுதிப் போடுன்னு கிண்டலாகச் சொல்றார்!" என்று இழுத்தான் வினோத்.

"கரெக்டாத்தான் சொல்லியிருக்கார்!" என்றாள் லாரா மீண்டும்.

"கரெக்டா?"

"ஆமாம்! கரெக்ட்தான்! உங்களுக்குப் புரிஞ்சுக்கத் தெரியலை!"

வினோத் திகைத்தான் "எங்கே நீ புரிஞ்சுக்கும்படி சொல்லு!"

"சொல்றேன். உங்க கேஸ் என்ன? நூற்று எண்பது பேர் ஒரு பண்டிகையிலே கலந்துகிட்டாங்க! அவர்களிலே ஒருத்தன் கொலை செஞ்சிருக்கான். அவன் யாருன்னு கண்டுபிடிக்க உங்களுக்கு வழி தெரியவில்லை. அவர்கிட்டே கேட்டீங்க! அவர் மொட்டைக் கடிதாசி எழுதிப் போடச் சொன்னார். அவ்வளவுதான்.

"யாருக்கு மொட்டைக் கடிதாசி?"

"அதை நீங்கதான் யோசிக்கணும்! இருந்தாலும் உங்க கேஸை புரிஞ்சுக்கிட்ட வரையிலும் நான் சொல்றேன். சஞ்சலா என்கிற ஒரு பெண் எதேச்சையா ஒருத்தன் கொலை செய்துட்டு வந்ததைக் கவனிச்சுட்டா!"

அவளைக் கொலைகாரன் ரொம்ப நாளாத் தேடிட்டு இருந்தான். ஒரு பண்டிகை நடக்கிற போது அந்தப் பெண்ணை அவன் கண்டுபிடிச்சான். பண்டிகை நடக்கும்போதே போய் க்ளோஸ் பண்ணிட்டான். பண்டிகைக்கு வந்த நூற்று எண்பது பேர்லே இவன் யாருன்னு உங்களுக்குத் தெரியணும். மேஜர் மாணிக் சொன்னது சரிதான். மொட்டைக் கடிதாசி போடுன்னு சொன்னாரே! இந்த நூற்று எண்பது பேருக்கு மொட்டைக்கடிதாசி போடணும்.

வினோத் ஆச்சரியமாகப் பார்த்தான். "என்ன எழுதணும்!" என்றான் ஈனமாக.

“சொல்றேன். இப்படி ஆரம்பியுங்க. நீங்கள் பண்டிகைக்கு வந்தவர், அந்தப் பெண் சஞ்சலாவைப் பார்த்து விட்டீர்கள்! அவளுக்கு நீங்கள் செய்த முதல் கொலை தெரியும். அவளே என்னிடம் அதைச் சொல்லியிருக்கிறாள். சில அடையாளங்கள் கூடச் சொல்லியிருக்கிறாள். ஆனால் அப்போது அதில் அதிகக் கருத்துச் செலுத்தவில்லை. ஆனால் சஞ்சலாவின் கொலை நடந்த விஷயம் தெரிந்ததும் உடனே உங்களைத் தேடினேன். நீங்கள் நழுவி விட்டதை அறிந்தேன். நானும் இதே ஸன்லைட் அபார்ட்மெண்ட்ஸில் வசிக்கிறேன். உங்களைப் போல் கொலை செய்யாவிட்டாலும், நானும் பலவான சந்தேகத் தொழில் செய்கிறேன். வெளியிலே ரொம்ப கண்ணியமாக இருக்கிறேன். உங்களை அனாவசியமாய் போலீஸில் காட்டிக் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே தாங்கள் எனக்கு ஒரு தொகை கொடுப்பதானால், நான் என் வாயைக் கப்சிப் என்று மூடிக் கொண்டு விடுகிறேன். இது பற்றிப் பேச வேண்டுமானால் நான் தங்களைச் சந்திக்கத் தயாராக இருக்கிறேன். எங்கே எப்போது என்பதை மிஸ்டர் எக்ஸ், கேர் ஆப் ஸன்லைட் அபார்ட்மெண்ட்ஸ் என்று கடிதம் அனுப்பவும்.

வினோத்துக்கு லாராவின் புத்திக் கூர்மை மீது பெரிய நம்பிக்கை தந்தது.

மேஜர் மாணிக்குடன் இருந்து இருந்து அவர் சொல்வதைக் கேட்டுக் கேட்டு இந்த கூர்மை வந்துவிட்டது என்று நம்பினான்.

அது மட்டுமல்ல! அந்தக் கடிதத்தில் என்ன எழுத வேண்டும் என்பதை என்ன அழகாக அவளே கற்பனை செய்து கூறிவிட்டாள்.

“லாரா! கை கொடு!” கை குலுக்கினார்கள்.

“ஏதோ சொன்னதுக்கு வருத்தப்படறேன். உன்னையே துப்பறிய அழைச்சுட்டுப் போயிடலாம் போல் இருக்கே!”

“எப்போ ஒரு வாட்டி அழைச்சிட்டுப் போனீங்க! என்று அங்கலாய்ப்புடன் கூறினாள் அவள்.

“நிச்சயம் அடுத்த சந்தர்ப்பம் வரட்டும்! உனக்கு ரொம்ப நன்றி! மாணிக் சொல்ற சூத்திரங்களுக்கு நீதான் சரியான விளக்கம் சொல்றே! நான் வரேன். இப்போதே காரியத்திலே இறங்கணும்.

போகும்போது அந்த மொட்டைக் கடிதாசி எவ்வளவு சுலபமான வேலை என்பதை யோசித்துக் கொண்டு போனான்.

அதைப் படித்துப் பார்த்தால் குற்றவாளியால் சும்மா இருக்க முடியாது.

ஏனெனில் நூற்று எண்பது பேரில் அவனை எப்படியும் கண்டுபிடித்து

விடுவார்கள் என்று தெரியும். நிச்சயம் அதிலிருந்து தப்ப முடியாது.

இந்த நினைவு கொடுக்கும் கலக்கத்தில் அவன் உடனே அந்த மொட்டைக் கடிதம் எழுதினவனோடு சமாதானமாகப் போக விரும்புவான். அவனை விலை கொடுத்து வாங்கப் பார்ப்பான்.

பார்ப்போமே! என்ன செய்கிறான் என்று.

## 5

நாற்று எண்பது கடிதங்களையும் தன் கையால் கஷ்டப்பட்டு ஒரே நாளில் எழுதி முடித்தான்.

கார்பன் வைத்து எழுதக்கூடாது. தவறு. ஒவ்வொருத்தருக்கும் தனக்கே வந்து போல ஒரு பந்த உரிமை ஏற்பட வேண்டும்.

எனவே சிரமம் பாராமல் கடிதங்களை அவனாகவே எழுதினான். லாரா கூறிய பிரகாரமே வாசகங்களை அமைத்திருந்தான்.

அவைகள் எல்லாவற்றையும் அன்றைக்கு மாலையில் பெரிய தபால் நிலையத்தில் போய் 'போஸ்ட்' பண்ணினான்.

மூன்று நாட்கள் வரை சும்மா இருந்து விட்டான். இடையில் லாரா ஒரு தரமும், உதயா ஒரு தரமும் பேசினார்கள்.

வழக்கம் போல் லாரா அவனது



**கே**ரள மாநிலத்தைச் சேர்ந்த நடிகை எலிசபெத் எம்டன் மகன், ஈரம், மாத்தியோசி உட்பட இருபது தமிழ்ப் படங்களில் நடித்துள்ளார். காதல் சொல்ல வந்தேனில் கதாநாயகனின் அம்மாவாகவும், இராவணனில் பிரியாமணியின் அம்மாவாகவும் நடித்துள்ளார். தம்பி அர்ஜுனாவில் வில்லியாக நடித்துள்ள இவர் மேலும் ஆறுக்கு மேற்பட்ட படங்களில் நடிக்கிறார்.

- க.ரவீந்திரன்

நடவடிக்கைகளை அவ்வப்போது அவளிடம் அறிவிக்கச் சொன்னாள்.

குறிப்பாக அவன் கொலையாளியைச் சந்திக்கப் போவதா இருந்தால் இடம், நேரம், எல்லாம் அவளிடம் குறிப்பிட வேண்டும்.

உதயா பேசின போது அவனது முன்னேற்றத்தைப் பற்றி கேட்டாள். அவனைப் பார்க்க வேண்டும் என்று ஒரு ஆதங்கம் இருப்பதாகவும் கூறினாள்.

ஸன்லைட் அபார்ட்மெண்ட்ஸில் தபால் விநியோகம் செய்த தபால்காரருடன் வினோத் ஒரு உடன்படிக்கைக்கு வந்திருந்தான். மிஸ்டர் எக்ஸ்ஸுக்கு எதாவது கடிதம் வந்தால் அதை ஜியோத்ஸ்னாவிடம் கொடுத்து விட வேண்டும்.

நான்கு நாள் போனது.

ஐந்து நாளும் போனது.

கடிதம் வரவில்லை. கொலைகாரன் பெரிய ஆளாக இருப்பானோ? இழுத்துப் பிடித்திருக்கிறானோ? அல்லது...

இந்தக் கடிதம் வெறும் ஏமாற்று என்று புரிந்திருப்பானோ?

முடியாது என்று வினோத்துக்குத் தெரியும். எப்போது முதல் கொலையையும் இரண்டாவதையும் சேர்த்து, இரண்டாவதற்கு முதல் கொலைதான் காரணம் என்று கூறியாகிவிட்டதோ, நிச்சயம் அவன் பயந்திருப்பான். ஏனெனில் அந்த உண்மைக் காரணத்தை வேறு யாரும் கண்டுபிடித்திருக்க முடியாது. எனவே இது ஒன்றே போதும் அவனைக் கலக்க வைப்பதற்கு. நிச்சயம் பதில் போடுவான். அதை எப்படிப் போடுவது, எப்படித் தொகை பற்றி பேச்சு வார்த்தை நடத்துவது! இதையெல்லாம் யோசித்துக் கொண்டு இருப்பான்.

மேலும் இரண்டு நாட்கள்.

கடிதம் வரவில்லை.

அவனுக்கு விரக்தி ஏற்பட்டது. கடைசியில் மாணிக் சொல்லிக் கொடுத்த யுக்தி வேலை செய்யவில்லை.

அதைப் பற்றி லாராவிடம் தெரிவிக்கலாம் என்று புறப்பட்ட போது, ஜியோத்ஸ்னா பேசினாள் "மிஸ்டர் வினோத்! லெட்டர் வந்திருக்கு."

"வந்தாச்சா?"

"ஆமாம்."

"பிரமாதம். இப்போ நான் அங்கே வந்து அதை எடுத்துக் கொள்ளக் கூடாது. அபார்ட்மெண்ட்ஸுக்குப் புதுசா யார் போறா வரா என்கிறதை அவன் கவனிச்சிக்கிட்டு இருப்பான். அதனாலே உதயா என்கிற

பெண்ணை பவுடர் ஸேல்ஸ் பெண்ணாக உங்க வீட்டுக்கு அனுப்பறேன். அவகிட்ட கொடுத்து அனுப்பிடுங்க!"

அரை மணியில் உதயா அனுப்பப்பட்டாள். கடிதத்தை வாங்கி விட்டுஅவள் இன்னும் இரண்டு இடங்களுக்கு வேண்டுமென்றே போய்விட்டு தன் வீட்டுக்கு வந்து விட வேண்டும். மறுநாள் காலையில் ஹோட்டல் விஸ்வாவுக்கு வந்து, லிஃப்டில் அவனிடம் கொடுக்க வேண்டும்.

மறுநாள் காலை வரை பொறுமையுடன் காத்திருந்தான். குறிப்பிட்ட நேரத்தில் விஸ்வா போய்ச் சேர்ந்தான். அவன் லிஃப்ட் போவதற்கும் உதயா வந்துசேருவதற்கும் சரியாக இருந்தது. உதயாவிடமிருந்து கடிதம் அவனிடம் மாறியது.

## 6

அன்புள்ள எக்ஸ்,

உங்கள் மீது எனக்கு நம்பிக்கையும் இருக்கிறது. அவநம்பிக்கையும் இருக்கிறது. பின்னது அதிகம். தங்களை ஏன் ஒரு போலீஸ் ஏஜெண்டாக நான் நினைக்கக்கூடாது?

இருந்தாலும் தங்களிடம் இருக்கும் துருப்பு என்னைப் பற்றிய விஷயங்கள், அது தங்களுக்குத் தெரிந்தது ஆச்சரியமாக இருக்கிறது. அதுதான் என்னை நம்பவும் வைக்கிறது. நான் நிச்சயமாக உங்களோடு உடன்படிக்கைக்கு வரத்தயார்! தங்களுக்கு நான் நிச்சயம் கணிசமான தொகை கொடுக்க விரும்புகிறேன். சத்தியமாக இதைச் செய்யப் போகிறேன். ஆனால் பொதுவாக முழுதாக ஏற்று நான் நேரில் தங்களிடம் பேசும் முன் தயவு செய்து என் சொல்படி கேட்கும்படி வேண்டிக் கொள்கிறேன். உங்களுக்கு எந்தத் தீங்கும் வராது என்று உறுதிமொழி அளிக்க விரும்புகிறேன். நீங்கள் நாளை மாலை நான்கு மணிக்கு அமிஞ்சிக்கரையில் உமையாள் தெரு பக்கத்தில் சாரதி சாலை இருக்கிறது. அதில் ஹோட்டல் வசுந்தரா இருக்கிறது. அதன் பக்கத்து கட்டடத்தில் வாசலில் 'காமதேனு' என்று போட்டிருக்கும். அதன் மூன்றாவது மாடிக்கு வாருங்கள். எதிர்ப்படும் முதல் சன்னலில் கடிதாசிப்படி வந்திருக்கேன் என்று சொல்லுங்கள் போதும்.


கடிதத்தில் கையெழுத்து எதுவும் கிடையாது. கடிதம் சுத்தமாக தமிழில் டைப் செய்யப்பட்டிருந்தது.

திரும்பவும் ஒரு முறை படித்தான். விஷயம் சிறிது சிறிதாக ஜீரணம்

ஆகியது. தன்னந்தனியாக வினோதை அழைக்கிறான். எவ்வளவு கெட்டிக்காரனாக இருக்கிறான். அவனை எளிதில் கைது செய்து விட முடியாதபடி எத்தனை சாமர்த்தியங்கள் செய்கிறான். தவிர ஏற்பாடு செய்ய அதிக நேரம் கூடக் கொடுக்கவில்லை. எல்லாவற்றையும் அவசரமாகவே செய்ய வேண்டியிருந்தது.

உதயாவிடம் விடை பெற்றான். பின்னர் போன் செய்வதாகக் கூறினான். புறப்பட்டான்.

இன்டெர்நேஷனல் டிடெக்டிவ் ஏஜென்ஸிக்கு பல வஸ்தாதுகள் பழக்கம் உண்டு. சமயங்களில் அவர்களை உபயோகித்துக் கொள்வார்கள். சில காரியங்கள் அவர்களால்தான் முடியும். தவிர, சிலவிதப் பாதுகாப்புக்கு அவர்கள் உதவி அவசியம்.



அந்த வஸ்தாதுகள் இருவரை அமர்த்திக் கொண்டான். மதியம் பன்னிரண்டிலிருந்து அவர்கள் இருவரும் சாரதி சாலை, காமதேனு கட்டடம் முன்னால் காத்திருக்க வேண்டும்.

வினோத் அந்தக் கட்டடத்திற்கு நான்கு மணிக்கு வருவான். உள்ளே போவான். அவன் உள்ளே போனதிலிருந்து பத்து நிமிடம் வரை காத்திருக்க வேண்டும். அதற்குள் வினோத் திரும்பவில்லை என்றால் யாரையோ தேடி வருபவர்கள் போல அவர்கள் மாடிக்கு வரவேண்டும். அவனைக் காணவில்லை என்றால் பூட்டிய கதவு பூட்டாத கதவு எல்லாவற்றையும்

நியூயார்க்கில் உள்ள டைம்ஸ்கொயரில் NASADAQ- இல் உள்ள மணியை அடிக்கும் நிகழ்ச்சி பிரபலமானது. இதில் கடந்த ஆண்டு ஷாருக்கான், கஜோல் ஆகியோர் மணியடிக்கும் வாய்ப்பை பெற்றனர். இந்த ஆண்டு பிரித்தி ஜிந்தாவிற்கு இந்த வாய்ப்பு கிடைத்தது.

- க.ரவீந்திரன்

பார்த்துவிட வேண்டும். எப்படியாவது விநோத்தை அவர்கள் கண்டுபிடித்து ஆக வேண்டும்.

மாலையில் விநோத் லாராவுக்கு போன் பண்ணினான். விவரங்களைக் கூறினான். அவள் 'ஜாக்கிரதை!' என்று ஒரு வார்த்தை மட்டும் கூறினாள். அவனுக்காக எத்தனை மணி ஆனாலும் போனில் காத்திருப்பதாகக் கூறினாள்.

மணி மூன்று.

மேஜர் மாணிக் ஏற்கெனவே பயிற்சி கொடுத்திருந்த சின்னச் சின்னக் கருவிகளை எடுத்துத் தன் மீது பொருத்திக் கொண்டான்.

ஒரு கணம் போலீசிடம் சொல்லலாமோ என்று தோன்றியது. தப்பிதம். அவர்கள் விஷயத்தைக் கெடுத்து விடுவார்கள். சொல்லாமல் போவதுதான் நல்லது.

நான்கு மணி நெருங்கும்போது ஸ்கூட்டரை எடுத்து பாரதி சாலை போய் விட்டான்.

மனம் திக் திக் என்றது. நிகழ்ச்சிகள் எப்படி நடக்கும். யோசிக்க முடியவில்லை.

ஹோட்டல் வசுந்தரா முன்னால் போய் நின்றான். ஸ்கூட்டரை ஸ்டாண்டில் வைக்கும் பாவனையில் எதிர்ப்புறம் நாசுக்காகப் பார்வை செலுத்தினான். சைக்கிளை நிறுத்தி அவனது வஸ்தாதுகள் நாட்டு புறம் போல நின்று பிரேக்கில் ரிப்பேர் செய்து கொண்டிருந்தார்கள்.

பக்கத்து காமதேனு கட்டடத்தைப் பார்த்தான். அதன் படிக்கட்டுகளைக் கண்டுபிடித்து ஏற ஆரம்பித்தான்.

மீண்டும் மனம் அடித்தது. ஆசாமி ஒரு கொலையாளி! தனது கொலையை மறைப்பதற்காக என்ன வேண்டுமானாலும் செய்வான். விநோதையே கொலை செய்து விட்டால்...

அதற்கெல்லாம் ஆயத்தமாகத்தான் வந்தான்.

முறுக்கிய படிகள் மேலே போய்க் கொண்டு இருந்தன. கடைசியாக தளத்திற்கு வந்தான். எங்கே சன்னல்!

ஆ, இதோ! அவன் எதிராக! ஆனால் சன்னல் மூடியிருந்தது.

அருகே போனான். கதவுகளை அழுத்தினான். திறக்கவில்லை. உள்ளே பூட்டி இருந்தது. பார்வை மேலும் கீழும் ஓட, அந்தத் துண்டுக் கடிதம் கம்பிக்கு இடையில் செருகப்பட்டிருப்பது தெரிந்தது. எடுத்தான். பிரித்தான்.

மிஸ்டர் எக்ஸ்!

இதுவரை நீங்கள் செய்த செய்கைகளுக்கு நன்றி! இனி கீழே போங்கள்! உங்கள் ஸ்கூட்டர் ஹாண்டிலில் ஒரு கடிதம் வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் படிப்பதற்காக நிற்காதீர்கள். எடுத்து அமிஞ்சிக்கரையைத் தாண்டிய பின்னரே அதைப் படிக்கவும்.

"ஆ! சாமர்த்தியக்காரன்... என்ன வேலை செய்து விட்டான்..."

கீழே இறங்கினான். ஸ்கூட்டர் ஹாண்டிலில் ஒரு சுருள் காகிதம் இருந்தது. தனது வஸ்தாதுகளுக்கு ஜாடை காட்டலாமா? அவர்கள் புரிந்து கொள்வார்களா? இந்த இடத்தை விட்டு இப்படிப் போகச் சொல்லுவான் என்று எதிர்பாக்கவில்லையே!

ஸ்கூட்டர் முன் தயங்கினால் ஆபத்து. நாம் ஏதோ சைகை செய்கிறோம் என்று புரிந்து கொள்வான்.

ஸ்கூட்டரில் ஏறினான். மிதித்தான். பறக்க ஆரம்பித்தான்.

அமிஞ்சிக்கரை தாண்டி கீழ்ப்பாக்கம் வந்ததும், ஆஸ்பத்திரி ஓரமாக ஸ்கூட்டரை நிறுத்தினான். படிக்க ஆரம்பித்தான்.

மிஸ்டர் எக்ஸ்.

இதுவரை எனது சோதனைகளில் வெற்றி பெற்று விட்டீர்! நேரே வீட்டுக்குப் போங்கள். உமது மனைவியை அழைத்துக் கொள்ள வேண்டும். மணி ஆறரைக்கு ராக்ஸி தியேட்டர் வாசல் வழியாக ஸ்கூட்டரில் நீர் செல்ல வேண்டும். எங்கேயும் நிற்க வேண்டாம். உமது பின்னால் உமது மனைவி உட்கார்ந்திருக்க வேண்டும். நேரே போய் அபிராமி வாசலில் அவளை இறக்கி விட்டு நீங்கள் மேலே போக வேண்டும். பூந்தமல்லி ரோடில் போங்கள்.

வினோத் இப்போதுதான் சில உண்மைகளை உணர முடிந்தது. ஆசாமி பெரியவன். வினோதைப் போலப் பத்து பேரைச் சாப்பிட்டு விடுவான். அத்தனை திறமை இருந்தது.

இப்போது வினோதின் பாதுகாப்பு எல்லாம் எகிறிவிட்டது. அவனது வஸ்தாதுகள் அவனைத் தொடர்ந்திருக்க மாட்டார்கள். அதற்கான உபதேசங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஒரே இடத்தில் எல்லாம் முடிந்து விடும் என்று நினைக்கப்போக, எதிராளி என்ன சாமர்த்தியாக அவனைத் தூக்கிப் பந்து ஆடிவிட்டான்.

இப்போது மனைவியை வேறு அழைத்து வா என்கிறான்! எதற்கு?

இந்த நிலையில் இந்த பரீட்சை அனைத்தையும் விட்டு விடுவோமா? அல்லது தொடர்வோமா?

வினோதுக்கு தர்மசங்கடமாக இருந்தது. இவ்வளவு தூரம் வந்து விட்ட பிறகு விட்டுவிட விருப்பம் இல்லை. அவன் திறமைக்கே அது இழுக்கு

போலத் தோன்றியது. தொடர வேண்டியது தான்.

பெண்டாட்டியை வாடகைக்கு எடுக்க வேண்டும். அவசர உதவிக்காக உதயாவிடம் போகலாம். அது ஒன்றுதான் வழி. இப்போது கூட எதிராளி அவனைக் கவித்துக் கொண்டிருக்கலாம்.

ஸ்கூட்டரைச் செலுத்தி நேரே உதயா வீட்டுக்குப் போனான். மணி ஐந்தரை ஆகிவிட்டது. அவளை சீக்கிரம் புறப்பட வைக்க வேண்டும். அதே நேரத்தில் லாராவுக்குச் செய்தி போகும்படி ஏதாவது செய்ய வேண்டும். அது முக்கியம்.

ஸ்கூட்டர் உதயா வீடு நோக்கிப் பறந்தது. அந்தி நேரமாகிவிட்டது. அவள் வீட்டு வாசலில் ஸ்கூட்டரை ஒதுக்கிவிட்டு, மணியை அடித்தான்.

சற்றுப்பொறுத்துத்தான் கதவு திறக்கப்பட்டது. திறந்தவள் உதயா! அவள் தனது வழக்கமான உடையில் இல்லை. குளிப்பதற்காகப் புறப்பட்டவள். உள்பாவாடையை மார்புக்கு மேல் கச்சை கட்டியிருந்தாள்.

அந்த நிலையில் அவன் திரும்ப நினைக்க, அவள் "வாருங்கள் வாருங்கள் என்று வாய் கொள்ளாமல் அழைக்க, உள்ளே போனான்.

வீடு நிசப்தமாக இருந்தது. "யாருமில்லை?" என்றான்.

"இல்லை! தங்கச்சி டான்ஸ் கிளாஸ் போயிருக்கு!"

"ஒரு அம்மா இருந்தாங்களே!"

"சமையல்காரிதான்! இன்று லீவு.

திகைத்தான். "உதயா நேரமில்லை! ஒரு வேண்டுகோள்! இப்போ ஆபத்து வந்திருக்கு!"

அவனைப் படுக்கை அறைக்கு அழைத்துச் சென்றாள்.

"உதயா! அவசரம்! ஒரு விசித்திர வேண்டுகோள்! நீங்க எனக்கு மனைவியா நடிக்கணும்!" என்று நிறுத்தினான்.

அந்த வார்த்தை வெளிவந்ததுதான் தாமதம். அவள் கண்கள் சமைத்து மிருதுவாகின. கண்ணீர் உருகி விட்டது.

அவனை இழுத்து மடியில் கிடத்தினாள். எதிர்பாராமல் முத்தம் ஒன்று வைத்தாள்.

"வினோத்! உங்களை மாதிரி ஒரு டீஸெண்ட் மனிதர் வாயிலிருந்து அந்தச் சொல் வந்ததே, எனக்கு மனம் நெகிழ்ந்து போச்சு! அந்த வார்த்தை வந்ததற்கே நான் கடமைப்பட்டிருக்கேன். எனக்கு இது புண்ணிய தினம். இன்னும் அஞ்சு நிமிஷம் கழித்து வந்திருந்தீங்கன்னா நான் போயிருப்பேன் என் தொழிலுக்கு! அதுக்காகத்தான் குளிக்க இறங்கினேன்!"

விடவில்லை அவள். அவனுடன் ஆலிங்கனமாகப் படுத்துக் கொண்டாள்.

மெல்லிய கதகதப்பான மேனியை அவனோடு ஊட விட்டாள்.

"உதயா! நேரமாச்சு. நாம்ப புறப்படணும்."

"புறப்படலாம்! புறப்படலாம்!"

அநேகமாக ஒரு புலம்பலில் இருந்தாள். அவள் கை அவன் கை இடுக்கு வழியாகப் போய் முதுகை வளைத்தது.

அவளது ஒரே துணி, அவளது மனம் போலவே



**சோ**னக்ஷி சின்ஹா சஜித் நாடியாவாலா தயாரிக்கும் 'கிக்' என்ற படத்தில் முதன் முதலாக நடிக்கிறார். படம் வெளிவருவதற்கு முன்பு நடிகை பிரபலமாகி விட்டார். அர்பாஸ் கானின் புதிய படத்தில் இவர் சல்மான்கானோடு நடிக்கிறார்.

- க.ரவீந்திரன்

அதுவும் நெகிழ்ந்து விட்டது. உள்ளிருந்த அவளது சுத்தமான கண்ணாடி உடல் அவனுடன் ஸ்பர்சமாகியது.

"உதயா!" என்றான்.

"ஹூம்! பேசாதீங்க!" என்றாள்.

ஏதோ ஒரு உன்மத்த நிலையில் இருந்தாள். சற்று எகிறி அவனது மார்போடு அணைய.

அவனுக்கு ஆனந்த சுகிர்தமாக ஒரு புது அனுபவம் கிட்டியது.

அவளது பருத்த அந்த மேலிடங்கள், இரு குழந்தைகள் போல அவன் மீது புரண்டன.

அவற்றின் அழுத்தம் ரப்பர் தன்மையில் அவன் உணர்வு

மெல்லிதாக வெளியே பறந்தது. அவள் அரைக் கணம் சும்மா இருக்கவில்லை. கால்களையும், கைகளையும் உதைத்து அவனுள் போக முயன்று கொண்டிருந்தாள். குழந்தையாகச் சிணுங்கிக் கொண்டு உதடு, கை இரண்டின் ஸ்பரிசங்களாலும் உணர்ச்சிக் கேந்திரங்களை எழுப்பிவிட்டு, மேலும் மேலும் அவன் மீது வியாபகமாகிக் கொண்டிருந்தாள்.

அவனது சிறு எதிர்ப்புகள் அவள் வேகத்தின் முன் தவிடுபொடியாயின.

சில விநாடிகளில் அவள் ஒரு ராக்கெட் சலனமாக மேலே மேலே பறந்து கொண்டிருந்தாள்.

புயல் கரை கடந்த பிறகு நிச்சலமான அமைதிக் கடலில் சிறிது மூழ்கி இருந்த பிறகு, வினோத் கடிகாரத்தைப் பார்த்து திடுக்கிட்டு எழுந்து, "உதயா, கம் ஆன்!" என்றான்.

ஒரு வெப்ப ஆவியில் வதங்கி பிறகு குளிர்ச்சி ஆன தனது உடலை அவள் எடுத்துப் போய், ஷவரில் நனைத்து எடுத்துத் துடைத்து விட்டாள்.

பிறகு இருவரும் உடுத்தினார்கள். வினோத் அவசரமாக லாரா நம்பரைச் சுழற்றினான். அவளும் கிடைத்தாள். ரொம்ப அவசரமாக நடந்ததைக் கூறிவிட்டு, திரும்பவும் சந்திக்கப் புறப்பட்டு விட்டதாகக் கூறினான். லாரா அதன் ஆபத்துகளை உணர்த்தியும் அவன் அதைப் பொருட்படுத்தவில்லை என்று கூறினான். அவனை யாரும் பின்பற்றாதபடியும், அதன் மூலம் பாதுகாப்புக் கொடுக்க முடியாதபடியும் எதிராளி செய்து கொண்டிருக்கிறான் என்பதைத் தெரிவித்தான். இப்போது உடனே அவன் புறப்பட்டுப் போவதாகவும் கூறினான்.

ஸ்கூட்டரைக் கிளப்பினான். நேரம் சரியாக இருந்தது.

உதயாவைப் பின்னால் வைத்துப் போய் ராக்ஸி வழியாக ஆட்களோ குறித்துக் கொள்வார்கள் என்று தெரியும்.

பிறகு அபிராமியை அடைந்தான். உதயாவை இறக்கிவிட்டு பூவிருந்தவல்லி ரோட்டை அடைந்தான்.

இனி உத்தரவு வரவில்லையே எனக் கவலைப் படும்போது அரும்பாக்கத்தில் பக்கத்தில் அவன் பின்னால் ஒரு மோட்டார் சைக்கிள் ஒரே வேகத்தில் வருவதை உணர்ந்தான். அவனைக் கடக்கும்போது அந்த நபர் – அடுத்த இடத்தில் போ! வேப்பமரம் உள்ள கட்டிடம். ரெண்டாவது மாடி! என்றான்.

இதையே இன்னொரு முறை கூறினான்.

அவனது குரல் செயற்கையாக இருந்தது. வினோத் அவனைக்

கவிதைகள்

## அடடே

கலவரத்தை
தொடங்கி வைத்துவிட்டு
சமரசமும் செய்கிறதே
அவள் வெள்ளை துப்பட்டா!

***

## கடவுள்

எளிதாகக்
குடியேறி விடுகிறார்
குழந்தைகள்
பிசைந்து கட்டிய
களிமண் கோயிலுக்குள்!

- பொதக்குடி 'வெற்றிமுரசு'

## காதல்

நண்பா!
மனப்பாடச் செய்யுளை
மணிக்கணக்கில் படித்தும்
மனதில் பதியவில்லை.
ஆனால்...
அவள் உதிர்த்த
வார்த்தைகள் மட்டும்
வருடங்கள் ஆகியும்
மறக்கவில்லையே...
இதன் பெயர்தான்
காதலா?

- போளூர் சி.ரகுபதி

கடைக்கண்ணால் பார்த்தான். மிலிடிரிகாரன் போல் இருந்தான். இந்த இருட்டிலும் குளிர் கண்ணாடி போட்டு முகத்தை மறைப்பதற்குத்தான். ஹெல்மேட் பாதி நெற்றியை மூடியிருந்தது.

இரண்டு முறை பேசிய ஆசாமி விர்ரென்று எகிறிப் போய் விட்டான்.

அடுத்த இடம் ஒரு பர்லாங்க் தொலைவில் வந்தது, ஒரு அனாதை விளக்குக் கம்பம்.

திரும்பினான். தெரு சற்று அகலம், வரிசையாகக் கட்டிடங்கள்! பாதி கடைகள்! ஏதோ ஒரு வியாபாரம் அங்கே மொத்த முறையில் நடக்க வேண்டும்.

வேப்பமரக் கட்டடம் எங்கே?

ஸ்கூட்டர் மெதுவாகச் சென்றது. இரண்டு நாய்கள் பளிச்சென்று ஓடின. தலைப்பு விளக்கு ஒரு வெண்மைக் குழலை தெரு எங்கும் வீசியது.

வேப்ப மர வீடு வலது வரிசையில் வந்தது. காம்பவுண்டு வசதியுடன் இருந்தது.

உள்ளே இரண்டு லாரிகள் இளைப்பாறிக் கொண்டிருந்தன. ஸ்கூட்டரை ஓரம் ஒதுக்கினான். காம்பவுண்ட் சுவரில் ஒழிக என்று ஒரு கோஷம்.

மர கேட்டைத் திறந்து உள்ளே சென்றான். வீடு நிசப்தம். மை இருட்டு! ஒரு நோட்டம்

விட்டான். நிச்சயம் எதிர்பார்த்ததுதான். இப்படிப்பட்ட இடமாகத்தான் இருக்க வேண்டும். சற்று நின்றான்.

நிசப்தம் இப்போது கெட்டியாக அவன் மேல் அழுந்தியது.

கண் இடதுபுறம் போக, அந்தக் கட்டடத்திற்கு ஒரு புஜம் தோன்றி இருப்பது போல மாடிப்படி ஒட்டியிருந்தது.

அதை நோக்கி நடந்து மேலே ஏறினான். முதல் மாடிக் கதவு சாத்தி இருந்தது. இரண்டாவது மாடிக்குப் போக, அதன் கதவு பாதி பிளந்திருந்தது. உள்ளே நுழைந்து ஹல்லோ என்றான்.

க்கும் என்று குரல்! நிசப்தம் கலைந்தது. “வாங்க!” என்ற குரல். ஒரு ஒல்லி அறை வாசலில் காத்திருந்தான்.

மனம் தும்தும் என்று மோதியது. உள்ளே நுழைந்தான். ஒரு எதிர்பார்ப்பான அச்சம் நினைவில் ஓடியது.

எந்த விநாடியும், எந்தக் கோணத்திலிருந்தும் ஆபத்து வரலாம்.

ஒல்லி உள்ளே அழைத்துப் போய் விளக்குப் போட்டு, அந்தப் பெரிய அறையின் நாற்காலியில் உட்கார வைத்தான். இன்னொருத்தன் வந்தான். அவன் கொஞ்சம் சுமார் உடம்புக்காரன்.

“உங்க பேர் வினோத்தானே?”

“ஆமாங்க!”

“ஐயா வருவாங்க!” என்றான் சுமார்.

அவன் சொன்ன விதத்திலிருந்து அவன் ஒரு வேலையாள் என்பது தெரிந்தது. அதன் பிறகு அவன் வெளியே மறைந்தான். ரொம்ப நேரம் யாரும் வரவில்லை.

வினோத் அந்த அறையை நோட்டம் விட்டான். இரண்டு சன்னல்கள் இருந்தன. இரண்டும் மூடியிருந்தது. அது முன்னேற்பாடு. வாசல் முகப்பைத் தவிர, உள்ளே இரண்டு கதவுகள் இருந்தன. ஒன்று பூட்டப்பட்டிருந்தது. மற்றொன்று வெறுமனே மூடியிருந்தது.

யோசித்தான். வாசல் கதவின் திண்மையைப் பார்த்தான். அவ்வளவு அதிகமில்லை. அவனை வைத்துத் தாழிட்டாலும் இரண்டு உதையில் உடைத்து விடலாம்.

கால் மணி நேரம் போனபின் இருவரும் உள்ளே வந்தார்கள்.

“ஸார்! அவங்க வந்தடுவாங்க. அதுக்கு முன்னாடி உங்க சட்டைப் பைகளை சோதனை போடணும்.

அது நியாயமாகப் பட்டது. “போடுங்க!” என்றான்.

இருவரும் அவன் உடம்பைத் தடவிப் பார்த்தார்கள். சில முக்கிய பகுதிகளில் கூடக் கைவிட்டது அருவருப்பாக இருந்தது.

அவர்களால் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

பிறகு, "ஸார்! இன்னொரு விஷயம். ஐயா வருவாங்க. பேசுவாங்க. நீங்க அவங்களை ஏதாவது செய்திடக் கூடாதுன்னு பயம் இருக்கு. அதனாலே ஒரு கண்டிஷன் போட்டிருக்காங்க."

"என்ன?"

"இந்த நாற்காலியிலே உங்க கையையும் காலையும் கட்டிப் போடணும்."

வினோத் ஒரு எரிப்போடு பார்த்தான்.

"சும்மா ஒரு பாதுகாப்புத்தான். உங்களை ஒண்ணும் செய்யப் போறதில்லை. அப்படிப் பூத்தாற் போலக் கட்டிருவோம். அவ்வளவுதான்.

"கட்டி ஆகணுமா?"

"ஆமாங்க."

"இல்லாட்டி?"

"இல்லாட்டி அவங்க உங்கக்கிட்டே பேச வரமாட்டாங்க!"

"அப்போ எனக்குப் பேச விருப்பமில்லை."

வினோத் எழுந்தான். வாசலை நோக்கி எட்டினான்.

"ஸார்... ஸார்... ஸார்!" என்று சுமார் அவன் பின்னால் வந்தான். அவனிடம் ரகசியம் பேசுவது போல், "சும்மா! கண் துடைப்பு வேலை ஸார்! உங்களை முகத்திலேயே புரிஞ்சுக்கிட்டோம் ஸார்! அவங்களை நீங்க ஏன் தாக்கப் போறீங்க? நாங்க சும்மானாச்சியும் கட்டி வைக்கிறோம்."

"ஏய்யா!" என்று வினோத் ஆத்திரத்தோடு திரும்பினான். "ஏற்பாடு ரொம்ப பலமா இருக்கே! நான் தாக்கிட்டேன்னான்னு கேட்டே! அதேபோல அவர் என்னைத் தாக்கிட மாட்டாங்களா?"

"ஐயோ, மாட்டாங்க!"

சுமாரும் ஒல்லியும் சத்தமில்லாமல் சிரித்தார்கள்.

"அப்போ நானும் தாக்கமாட்டேன். என் கையிலே ஆயுதமா இருக்கு?"

"ஸார்! என்றான் ஒல்லி! நான்தான் சொல்லிட்டேன்! சும்மாணாச்சியும் கட்டுப் போடறேன். நீயே பார்த்துக்க! உனக்கு ஏதாவது வந்திடுச்சு! ஒரு எகுறு எகுறு! கயிறெல்லாம் பறந்த பூடும். நீ உட்காரு ஸார்! உங்க காலைக்

கட்டிக் காண்பிக்கிறேன்.

அவன் வற்புறுத்த வினோத் உட்கார்ந்தான்.

"ஏன்யா! நீங்கதானே கூட நிக்கப் போறீங்களே, உங்களை மீறி நான் அவரைத் தாக்கிடுவேனா?"

"இல்லை ஸார்! அப்படியில்லை! நீங்கபேசும்போது நாங்க ரெண்டு பேரும் உள்ளே இருக்கமாட்டோம்."

வினோத் குழம்பினான்.

ஒல்லி ஒரு கயிற்றைக் கொணர்ந்து காலைச் சுற்றி வடம் போட்டான். அப்படிப் பூப்போல் இரண்டு முறை சுற்றினான். "இப்போ பாரு ஸார்!" என்றான்.

வினோத் பார்த்தான். கட்டியது போல் பிரமை கொடுத்தது.

"நீ உதறி பாரு ஸார்!" என்றான் சுமார் ரகசியமாக.

வினோத் உதறினான். கயிறு கழன்று அப்புறம் ஓடிற்று.

வினோத் தனது பாக்கெட்டில் கையை விட்டான். பர்ஸை எடுத்து ஒரு இருபது ரூபாய்த் தாளை நீட்டினான்.

"எதுக்கு ஸார்! எதுக்கு ஸார்!" என்று சொல்லிக் கையைப் பின்னுக்கு இழுக்காமல் வாங்கிக் கொண்டான் ஒல்லி.

வினோத்துக்கு அதுபெரிய வெற்றி! ஏனெனில் எதிராளி ஆசாமியைச் சிறிதளவாவது கைக்குள் போட்டுக் கொள்ள முடிந்ததே! பணத்திற்கு மசிவார்கள் போல.

கட்டு வேலைகள் ஒரு மாதிரி முடிந்த பிறகு இரண்டு பேர்களும் வெளியேறினார்கள்.

இன்னும் ஐந்து நிமிடம் ஓடியது. எதிரே ஒரு கதவு திறக்கப்பட்டது. முதலில் ஒரு நடுத்தர ஆள் உள்ளே வந்தான். மீசை வைத்து பாண்ட் போட்டிருந்தான். அவனை அடுத்து ஒரு ஆலிவ் கலர் பாண்ட் சட்டை போட்ட ஆசாமி வந்தான். வந்த ஆகிருதியைப் பார்த்தால் அவன்தான் வினோத் சந்திக்க வந்தவன் என்று தோன்றியது. ஆனால் என்ன பிரயோசனம்?

கண்ணில் குளிர் கண்ணாடி! மேலே நெற்றிவரை இழுத்து விடப்பட்ட, தொப்பி! கழுத்தைச் சுற்றி ஒரு டவலைச் சுற்றி ஒரு துணியை முன்புறமும், மற்றொன்றைப் பின்புறமும் போட்டிருந்தான். முழுக்கை சட்டை போட்டிருந்தான். கையில் வேறு க்ளவ்ஸ்!

மோட்டார் சைக்கிள் ஆசாமியா என்று யோசித்தான்.

இல்லை.

சாதாரணமாக வரப் போகிறான் என்று பார்த்தால் இப்படி முழுவதையும் மறைத்துக் கொண்டு வந்திருக்கிறானே! ஒரு அவயவம் கூடத் தெரியவில்லை. முகத்தில் சிறிது கன்னம், வாய் தவிர மற்றதெல்லாம் மூடல்.

யோசித்தான். அதில் ஏதோ காரணம் இருக்க வேண்டும். நூற்று எண்பது பேரில் ஒருவர் என்றால் தமது சொந்த வடிவத்திலேயே வந்திருக்கலாம். இப்படி அலங்காரம் பண்ணி ஏன் மறைக்க வேண்டும்?

ஒருவேளை!

அவனது அடையாளம் தெரிவதை அவன் விரும்பவில்லை.

வினோத் அதைக் கண்டுபிடித்து விடுவான் என்று நினைத்திருக்க வேண்டும்.

வினோத்துக்கு எரிச்சல் வந்தது. முகத்தை, கண்ணை மறைப்பது சரி, கையைக் கூடவா மறைப்பது? கையில் என்ன இருக்கிறது அடையாளம் கண்டுபிடிக்க!

கண்ணாடி ஆசாமி நாற்காலியில் உட்கார, மீசை ஆசாமி பக்கத்தில் நின்றான்.

“ஐயா உங்களுக்கு நன்றி தெரிவிச்சாங்க! அவங்களாலே பேச முடியாது. தொண்டை சரியில்லை. உங்களுக்கு விஷயம் எப்படித் தெரியும்னு கேட்கிறாங்க.

மீசைக்காரன் கையில் ஒரு காகிதத்தைத் திறந்து வைத்திருந்தான். அதில் கேட்க வேண்டிய கேள்விகள் இருந்தன.

“அதைப் பற்றிக் கேட்காதீங்க! எனக்கு ஒருத்தனுக்குத்தான் விஷயம் தெரியும். நான் சொன்ன விஷயம் சரிதானே! பானுமதி தீர்ந்துட்டாங்க. அந்தக் குற்றம் வெளிவராதபடிக்கு சஞ்சலாவையும் தீர்த்துட்டாங்க!

வினோத் அழுத்தமாகக் கூறினான்.

கண்ணாடி ஆசாமியிடம் சலனமே இல்லை. முகத்தசையில் சிறிது சலனம் வரவேண்டுமே! கிடையாது.

மீசைக்காரன் கையிலிருந்த காகிதத்தை வாங்கி ஒரு கேள்வியைக் காண்பித்தான் கண்ணாடி ஆசாமி.

“எவ்வளவு பணம் கேட்கறீங்க?” என்றான் மீசைக்காரன்.

“எவ்வளவு தரீங்க?”

“ஐம்பதாயிரம்!”

சிரித்தான் வினோத். "அது என்னத்துக்குக் காணும்! இரண்டு லட்சம்."

அவர்கள் இருவரும் யோசித்தார்கள். அதற்குள் வினோத் மனத்தில் பரபரத்தான். அவனது லட்சியம் பணத்தை வாங்கிப் போவது அல்ல! அதற்குப் பதிலாக ஆளைக் கண்டுபிடிக்க வேண்டியது. இங்கே ஆசாமி ஒரு முகமூடி போல வந்திருக்கிறான். ஆளைக் கண்டுபிடிப்பது கஷ்டம்.

வினோதின் கண் கண்ணாடி ஆசாமியின் கையில் விழுந்தது.

அதைப் பார்க்கும் போதுதான் ஒவ்வொரு விரல் நுனியிலும் க்ளவுஸ் ரொம்பவும் இழுபட்டு கூர்மையாகத் தெரிந்தது.

சட்டென்று அந்தத் தோற்றம் அவன் கவனத்தை இழுத்தது.

ஏன் அப்படிக் கூர்மையாக இருக்கிறது நகம்?

இன்னும் ஒரு ஆராய்ச்சிப் பார்வை.

விரல் நீளமாகவும் இருந்தன.

சட்டென்று ஒரு எண்ணம் வர மேலே பார்த்தான். உடம்பைப் பார்த்தான்.

கழுத்து லேசாகத் தெரிந்தது. உதட்டில் அந்த மீசை பொய்யென்று புரிந்தது.

"ஓகோ. அதுதான் பேசமாட்டேன் என்கிறாளா?"

எதிரே இருப்பது ஒரு பெண் என்பது புரிந்துவிட்டது. அவளது நீள நகங்களும், விரல்களும்தான் க்ளவுஸில் தெரிந்தன. அந்த மென்மைக் கழுத்து, வழுமையான கன்னம்.

ஆ! குற்றவாளி ஒரு பெண்ணா?

யார் அவள்?

தனியாக இந்த வேலை செய்கிறாளா?

ஆண் வேடம் போட்டு அக்கிரமங்கள் செய்கிறாள். யார் இவள்?

நூற்று எண்பது விலாசங்களில் ஆண்களைப் பார்க்கிறோம். பெண்களை ஏன் பார்க்கவில்லை?



பெண்கள் கொலை செய்யமாட்டாங்க என்று ஏன் ஊகிக்க வேண்டும்?

"இரண்டு லட்சம் முடியாது! ஒரே ஒரு லட்சம்?" என்றான் மீசைக்காரன்.

"நான் ஒத்துக்கொள்ள மாட்டேன்."

திரும்பவும் நிசப்தம் அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தார்கள்.

பிறகு மீசை கண்டிப்பான குரலில் "மேலும் ஒரு ஐம்பதுக்கு ஒத்துக்கிட்டா ஒத்துகிடுங்க! இல்லாட்டி வழியில்லை!" என்றான்.

"பரவாயில்லை! என்னை அவிழ்த்து விடுங்க! கிளம்பறேன்!"

"அவிழ்த்து விடவா உங்களை இங்கே கூப்பிட்டிருக்கோம்? சும்மா இருங்க!" என்று சொன்ன மீசை. "டேங்கப்பா!" என்றான்.

ஒல்லியும், சுமாரும் உள்ளே ஓடி வந்தார்கள்.

"ஐயாவைக் கவனிச்சுக்க! ஆளை அனுப்பறோம்" என்றான்.

கண்ணாடிக்காரன் எழுந்தான். அவனும் மீசையும் போகத் தலைப்பட்டார்கள்.

கண்ணாடிக்காரன் திரும்ப, அவனது இரு விலாப்பக்க சந்துகளும் செய்யும் சுழிவு தெரிந்தது. ஆகா நிச்சயம்! இது பெண் நடைதான்!

**த**ஞ்சை பெரிய கோயிலின் முன்பு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சிக்ஸ்டினி ஜூலிஸ் பரதநாட்டிய போஸ் கொடுத்து எடுத்துக் கொண்ட படம் இது.
- க.ரவீந்திரன்



“இந்தாங்க மிஸ்...” என்றான் வினோத். கண்ணாடிக்காரன் திடுக்கிட்டு நின்றான்.

“உங்களுக்கு மேஜர் மாணிக் ஒரு கடிதாசி எழுதியிருக்கார். என் சட்டைப் பையில் இருக்கு! எடுத்துக்குங்க!” என்றான்.

கண்ணாடி ஸ்தம்பித்து நிற்க, மீசைதான் நடந்து முன்னால் வந்தான். “என்ன, எங்க தலைவரைப் பார்த்து மிஸ் என்கிறே?” என்றான் கோபத்தோடு.

வினோத் புன்னகை பூத்தான்.

“அவங்க செக்ஸ் உங்களுக்கே தெரியாதா?”என்றான் வினோத் மீசையைப் பார்த்துக் கிண்டலாக.

அவன் சட்டைப் பையிலிருந்து மீசை கடிதாசியை எடுத்தான்.

பிரித்துப் படித்தான்.

எனக்கு ஏதாவது தீங்கு ஏற்பட்டு நாளை காலைக்குள்ளே திரும்பலைன்னா போலீஸ் இங்கே வந்துடும். அப்படி ஏற்பாடு ஆயிருக்கு.

“இந்த விலாசம் அவங்களுக்கு எப்படித் தெரியும்? நாங்கதான் விலாசம் கொடுக்கத் தோது இல்லாதபடி பண்ணிட்டோமே! உங்களை எத்தனை வாட்டி மாத்தி மாத்தி இழுத்தடிச்சோம்.”

“அதனாலே என்ன! இப்படித் தனியாக வந்து அகப்பட்டுக் கொள்ள நாங்கள் முட்டாள் இல்லை!”

“ஏன்! என்ன வச்சிருக்கீங்க?”

“உங்க தெரு வாசல்லே. குப்பையோடு குப்பையா ஒரு சின்ன கருவியைத் தூக்கி போட்டிருக்கேன். பீப்பீப்னு வொயர்லெஸ்லே சத்தம் கொடுத்திட்டிருக்கும். தெரிஞ்சுதா? அதைக் கேட்டுக் கிட்டே இங்கே வந்துடுவாங்க.

மீசை சற்று பின்வாங்கினான். கடிதத்தைப் படித்தான். அதிலும் வினோத் சொன்ன எச்சரிக்கைத்தான் இருந்தது.

இருவரும் போகத் தலைப்பட்டார்கள்.

“சாந்தி! என்றான் வினோத்.

திடுக்கிட்டுக் கண்ணாடித் திரும்பியது. வினோத் ஒரு எகிற எகிற,

கயிற்றுச் சுருள் கழன்று விழுந்தது.

வினோதின் பேச்சு, அழுத்தம், அவன் நடந்து கொண்ட முறைகள், கண்ணாடியைப் பெயர் சொல்லி அழைத்தது, கடைசியில் கயிற்றுச் சுருளை ஒரே வீச்சில் கழற்றி எறிந்தது எல்லாம் அவர்களைப் பெரிய அச்சத்தில் நிறுத்தியது. எனினும் மீசை விடவில்லை. பாண்டுக்குள் கைவிட்டுக் கத்தியை எடுத்து விரித்தான்.

வினோத் தனது பாண்டுக்குள் கை விட்டான் "இந்தா மீசைக்காரரே! இந்த வேலை எல்லாம் வேண்டாம். தப்பிக்க முடியாது. நான் இறந்துபோகத் தயார்! நீ தப்ப முடியுமா பாரு! சாந்தி சொல்லு அவன்கிட்டே."

"நிறுத்துங்க" என்று முதன் முறையாகப் பேசினது கண்ணாடி! பெண் குரலில்.

"கமான் சாந்தி! உன்னையும் உன் காதலனையும் அப்போதே நான் புரிஞ்சுகிட்டாச்சு! முதல் கொலையை சஞ்சலா பார்த்தாச்சு! நீயும் உன் காதலன் நடராஜுமாக அதைச் செய்திருக்கீங்க! வீட்டுக்காரங்க திறக்க மாட்டாங்க என்கிறதினாலே சாந்தி போய் கதவைத் தட்டிக் கூப்பிடுவா! பெண் கூப்பிட்டதனாலே வீட்டுக்காரங்க கதவை எளிதிலே திறந்துடுவாங்க. நீ (சாந்தியைப் பார்த்து) போய் உள்ளே பேசிக்கிட்டிருக்கும் போது, உன் காதலன் பிரதாப் வந்துடுவான் கொலை செய்ய ஆரம்பிப்பான். நீ உடனே வந்துடுவே வெளியிலே. பிரதாப் அப்புறம் வருவான்.

அப்படி நடராஜ் வர்றதைப் பார்த்துட்டா சஞ்சலா! அவளை தீர்த்துக் கட்டணும்னு நீங்க நினைச்சாச்சு! ஆனா அவள் அகப்படலை. நடராஜ் ஊர்லே பல பேருக்குப் பலவிதமா போஸ் பண்ணியிருப்பான். இதனாலேதான் ஜியோத்ஸ்னா குடும்பத்துக்கு அவனைத் தெரிஞ்சிருக்கணும். நல்ல கண்ணியமானவன் போலத் தெரிஞ்சிருக்கணும், அவர்கள் இன்விடேஷன் கிடைச்சு பண்டிகைக்குப் போனப்போ சஞ்சலாவை அவன் பார்த்தாச்சு. அந்தக் கணமே அவளைக் கொல்லத் தீர்மானம் போட்டாச்சு!

சஞ்சலாவும் அவனைப் பார்த்து அடையாளம் புரிஞ்சுக்கிட்டு பயந்து மாடிக்குப் போயாச்சு. அவள் போன பிறகு ஜியோத்ஸ்னா வீட்டு சிறுமி இரண்டு வாட்டி போய் கதவைத் தட்டிப் பேசியிருக்கா! அதனாலே அடுத்த தடவை திரும்பி ஒரு பெண் குரல் கேட்டவுடனே சஞ்சலா கதவைத் திறந்தாச்சு! அந்த விதமா உள்ளே போனவள் நீதான் சாந்தி! நீ பேசிட்டிருக்கும்போது பிரதாப் உள்ளே வந்தாச்சு. ஆச்சு! நீ உடனே கீழே இறங்கியாச்சு! இரண்டு நிமிஷத்துதிலே வேலையைச் செஞ்சுக்கிட்டு நடராஜும் இறங்கியாச்சு! உங்களை நான் எப்படிக்

கண்டுபிடிச்சேன்? இப்போ கொஞ்சம் முன்னாடி வரை கண்டுபிடிக்கலை. கொஞ்சம் முன்னாடி நீ ஆண்பிள்ளை டிரஸ்லே வந்திருந்தே! எல்லா வேலைகளுக்கும் நீதான் மூளை செலவழிப்பவள்! ஒரு ஆணுக்கு உண்டான தைரியம், கிரிமனல் புத்தி எல்லாம் உன்கிட்டே இருக்கு! நீ ஸெக்ஸ் மாறாத ஆண்! சாகசக்காரி! வேஷம் போட்டு என் எதிரே வந்திருப்பது ஒரு பொண்ணு ஒரு பளிச்லே ஊகிச்சேன் பாரு, என் மனசு தாவிப் போச்சு! ஒரு பெண்ணுக்கு இவ்வளவு சாகசம் பண்ணத் தெரிஞ்சா அவள் அந்த 180 பேர்லே யாராய் இருப்பா! ஜியோத்ஸ்னா அனுப்பிய 180 பேர் அழைப்பிலே ஒருத்திதான் பெண்! சாந்தி என்கிற பேர். ஒரே ஒரு பெண்ணுக்குத்தான் இன்விடேஷன் போயிருக்கு! எனவே நீயாகத்தான் இருக்கணுமின்னு ஊகிச்சு 'சாந்தி'னு உன்னைக் கூப்பிட்டேன்! நீ திரும்பினே! உடனே மறுக்கல்லே. புரிஞ்சு போச்சு! அப்புறம் வந்து இவர் மறுத்தார். அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை.

என் பேர் நடராஜ்னு எப்படித் தெரிஞ்சுது!

அதுவும் ஊகம்தான். ரெண்டுமுறை கூல்டிங்க் வாங்கிச் சாப்பிட்டவன் நீ! உன் பேரைச் சும்மா ஒரு தினுசுல சொன்னேன்! நீயும் மறுக்கலே. ஒத்துகிட்டாச்சு. இப்படி என் ஊகத்திலேயே அறிஞ்சு அறிஞ்சு இன்னிக்கு உங்க ரெண்டு பேரையும் கண்டுபிடிச்சாச்சு.

"இந்தாப்பா..."

ஒல்லியும், சுமாரும் கதவோரமே நின்றார்கள். இப்போது உள்ளே வந்தார்கள். அவர்கள் இத்தனை நேரம் வரை வினோத் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள் என்பது வினோத்துக்குத் தெரியும். ஒரு உதாராக, இந்தா! நான்தான் போலீஸ்! இவங்களைக் கட்டிப்போடு! என்றான் வினோத். அவர்கள் சாந்தியை அணுக நடராஜ் துள்ளித் தாவினான். அடுத்த கணம் வினோத் தாவி அவனைப்பிடித்து முகவாயில் ஒரு கும் கொடுத்துக் கீழே தள்ளினான். அவனை ஒரு காலால் அழுத்தி வைத்திருக்க, சுமாரும் ஒல்லியும் அவனைக் கட்டினார்கள்.

பிறகு ஊரிவ் உள்ள ஒரே போனில் பேசி போலீஸை வரவழைப்பதற்கு இரண்டு மணி நேரம் ஆயிற்று.

தனது ஊகத்தினால்தான் அந்த கேஸ் தப்பியது என்று வினோத் இன்ஸ்பெக்டர் ஆறுமுகத்திடம் கூறிக்கொண்டான்.

வினோத் செய்த அந்த ஊகத் தீர்மானங்களைக் கேட்டு மகிழ்ச்சியோடு கை குலுக்கினார் இன்ஸ்பெக்டர் ஆறுமுகம்.

**☞ முற்றும் ☜**